1—7—'62 தேதியன்று
திருநெல்வேலி நகராட்சி பொருட்காட்சி
திறப்பு விழாவின் போது

திருநெல்வேலி நகரசபைத் தலைவர்

திரு. குற்றாலலிங்கம் செட்டியார்

அவர்களின் வரவேற்புரையும்

கோவை

திரு. ஜி. டி. நாயுடு

அவர்களின் சொற்பொழிவும்.

The Industrial Labour Welfare Association Ltd.,
COIMBATORE.

1—7—'62 தேதியன்று
திருநெல்வேலி நகராட்சி பொருட்காட்சி
திறப்பு விழாவின் போது

திருநெல்வேலி நகரசபைத் தலைவர்

திரு. குற்றாலலிங்கம் செட்டியார்

அவர்களின் வரவேற்புரையும்

கோவை

திரு. ஜி. டி. நாயுடு

அவர்களின் சொற்பொழிவும்.

The Industrial Labour Welfare Association Ltd.,
COIMBATORE.

திருநெல்வேலி நகராட்சி பொருட்காட்சி திறப்பு விழா.

குற்ருலலிங்கம் செட்டியார்,

நகராட்சித் தலைவர்.

தலைவர் வரவேற்பு உரை.

தாய்மார்களே, வாலிபர்களே, சகோதரர்களே,

உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வணக்கம் உரித்தாகுக. நமது பொருட் காட்சியை திறந்து வைக்க வந்திருக்கும் உலகம் பூராவிலும் போற்றப் படும் தொழில் நிபுணர், பெரிய மேதை என்று போற்றப்படும் உயர் திருவாளர் ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களே வருக! வருக! என்று பொருட்காட்சி கமிட்டியின் சார்பாகவும், பொதுமக்களாகிய திருநெல்வேலி நகரத்தின் பொது மக்களாகிய உங்களுடைய சார்பாகவும், எங்களுடைய சார்பாக வும் வரவேற்கிறேன். (கரகோஷம்).

அடுத்தபடியாக, அவர்கள் உடன் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி வந்திருக்கும் கோவை திரு கண்ணப்பரையும் வரவேற்கிறேன். அடுத்த படியாக எங்களுடைய அழைப்பிற்கிணங்கி இப்பவும் வந்து இவ்விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் பெரியோர்கள், தாய்மார்கள், மாணவர்கள் எல்லோரையும் பொருட்காட்சியின் சார்பாக வரவேற்கிறேன். (கரகோஷம்). உங்கள் நேரத்தை நான் வீணுக்க

விரும்பவில்லை. இரண்டொரு வார்த்தை இந்தப் பொருட் காட்சியைப் பற்றி சொல்லுகிறேன்.

நாம், நமது நகரத்தில் 12 வருடங்களாக இந்தப் பொருட் காட்சியை நகர மன்றத்தார் சார்பாக நடத்தி வருகின்றோம். இன்றும் 13-வது தேசிய பொருட் காட்சி ஆரம்பமாகிறது. நாங்கள் மாத்திரமென்ன நீங்கள் எல்லோரும் ஆவலோடு 12 வருடங்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த தொழில் மேதை உலகம் பூராவும் போற்றப்படும் மேதை, நம் தமிழ் நாட்டு மேதை, (அதுதான் ரொம்ப முக்கியம்) தமிழ் நாட்டில் (கரகோஷம்) ஒரு உத்தமர், தொழில் நிபுணர், யார் இருக்கிறார் இப்படிப்பட்ட மேதை யார் என்றால் நமது திரு ஜி. டி. நாயுடு அவர்கள்தான். எனக்கு ஒரு பாக்கியம் கிடைத்தது. அவர்களுடைய இல்லத்தில் போய் அவருடைய ஒவ்வொரு தொழிற் சாலையையும் பூராவும் பார்த்தோம். எப்பேர்ப்பட்ட குணம் தெரியுமா! தொழில் நிபுணர் மாத்திரமல்ல. (கரகோஷம்). அளவு கடந்த அவரது உபசரிப்புக்கு இப்படிப்பட்ட மேதாவிக்கு எப்படித்தான் வாய்ப்புக் கிடைத்ததோ! எங்களுக்கே ஒரு ஆச்சர்யமாகத் தான் இருக்கிறது. போனவர்களை வெளியே செல்ல விடவில்லை. "எங்களுடைய Guest House-ல் வந்திருக்கிறீர்கள், நீங்கள் திருநெல்வேலியிலிருந்து வந்திருக்கிறீர்கள். இங்குதான் இருக்கவேண்டும், உங்களையெல்லாம் நாங்கள் உபசரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்". மேனாட்டுக் காரரெல்லாம் வந்து இருக்கக்கூடிய ஒரு இடத்தில், திருநெல்வேலி நகர மன்றத்தின் தலைவரும் கவுன்சிலர்களும் வந்து உட்காருகிற ஒரு பெருமை அன்று, அந்தப் பெருமை எங்களை கண்டிப்பாக உட்காரத்தான் செய் கிறது. நாங்கள் வேறு ஒரு அறையில் அமர்ந்திருந்த வர்களை வாருங்கள் என்று அழைத்தார்கள்.

நாங்கள் போய் இரண்டு நாள் ரொம்ப சுகமாக இருந்தோம். (கரகோஷம்) சுகமாகவா! அதைப்பற்றி நான் லேசாக சொல்ல முடியாது. நான் இதற்கு முன்னால் இதுமாதிரி Guest House ல் இருந்ததில்லை, ஏனென்றால் அப்பேர்ப்பட்ட Guest House (கரகோஷம்) ஸ்பிரிங் காட், ஒரு டன்லோப் பில்லோ, ஒரு டன்லப் மெத்தை, ஒரு டேப்பைத் திறந்தால், எங்கே இருந்து வந்திருக்கிறது ஜர்மனியிலிருந்து வந்திருக்கிறது ஒரு Hot water bath அதற்கந்தப்புறம் Cold water bath. நாம் வீட்டில் வைத்திருக்கிறோமே அதுவா ஸ்நான அறை? அங்கே போய்ப் பார்க்க வேண்டும் ஸ்நான அறையை. (கரகோஷம்). அப்பேர்ப்பட்ட ஸ்நான அறையெல்லாம் பார்த்து, அதற்கப்புறம் ஒர்க்ஷாப்புகளுக்குப் போய் ஒவ்வொரு தொழிலையும் பார்த்தோம். ரேடியேட்டர்ஸுக்குப் போனால் லேலண்டு, பென்ஸ் முதலிய பெரிய பெரிய கார்களுக்கெல்லாம் இப்பொழுது இந்தியாவில் ரேடியேட்டர் செய்கிற நிபுணர் யார் என்றால் நம் திரு G. D. நாயுடு அவர்கள்தான். அதோடவா போகுது, இந்த போட்டோவுக்கு, புரோமைட் பேப்பர் இருக்கிறதே அந்த புரோமைட் பேப்பர் செய்வதற்கு – எனக்கு அந்தத் தொழிலில் ஒன்றும் தெரியாது நான் போய்ப் பார்த்தேன். ஒரே ஆச்சரியமாக இருக்கிறது. அது என்ன ஐயா டார்க் ரூமா ஒயிட் ரூமா அது என்னது என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை அவ்வளவு பெரிய நீளமாகப் போகுது. நீளமாகப் போகும்போது ஒவ்வொன்றும் ஒவ்வொரு Iron safe மாதிரி இருக்கிறது. அவ்வளவையும் ஒரு பெரிய டெக்னிஷியனை எங்கள் கூட அனுப்பி, "நீங்கள் அவைகள் எல்லாவற்றையும் பாருங்கள், ஒவ்வொன்றையும் விபரமாகச் சொல்லுவார்கள்", என்று சொன்னார்.

அதோடவா போகுது? Projector செய்கிறார்கள் (கரகோஷம்) 16 mm. Projector அதுவும் செய்ய ஆரம்பம் ஆகிவிட்டது. Projector செய்கிற இடத்தையும் போய்ப் பார்த்தோம். பிறகு நீங்கள் எல்லோரும் அதாவது மாணவர்கள், வாலிபர்கள் எல்லோரும் கார்பன் பேப்பர் டைப்ரைட்டிங்குக்கு, எங்களைப்போன்ற வியாபாரிகள் எல்லாம் பில் புக்குகளுக்கு அடியில் வைக்கிற கார்பன் பேப்பர் இதெல்லாம் செய்கிறார் ஐயா. அந்த இடத்தையும் போய்ப் பார்த்தோம்.

அதற்கப்புறம், ரேடியோதான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேனே. U. M. S. Radio set என்கிறது உலகக்கீர்த்தி பெற்றுகிவிட்டது. அதனால் உங்கள் எல்லோருக்கும் தெரியும். அதுவும் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

பிறகு காருக்கு, நாம் எல்லாம் ஆட்டோ மோபைல் இன்ஜினீயர் என்றால் 6 வருஷம் படிக்க வேண்டும், 3 வருஷம் படிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இந்த நிபுணரிடம், எத்தனை வருஷம் என்று நினைத்துக்கொண்டீர்கள்? இங்கே வாருங்கள், உங்களிடம் மாணவர்களைத்தான் சொல்லுகிறேன். வருஷக்கணக்கிலா படிக்கவேணும் என்கிறீர்கள்? இங்கே ஆறே ஆறு வாரம் – 6 வாரத்தில் ஆட்டோமோபைல் இன்ஜினீரிங் கோர்ஸ் பூராவும் பாஸ் பண்ணுவதற்கு அங்கே வைத்திருக்கிறார்கள். அங்கே படிப்பு சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். கற்றுக்கொண்டு இருப்பவர்கள் – யார் என்று நினைக்கிறீர்கள்? B. Sc., B. E., எல்லா கோர்சும் பாஸ் பண்ணினவர்கள். S. S. L. C. பாஸ் பண்ணினவர்களும் வருகிறார்கள். S. S. L. C.

பெயில் ஆனவர்களுக்கும் இடம் இருக்கிறது. நீங்கள் எல்லோரும் S. S. L. C. படித்திருக்கிறீர்கள். ஆனால், ஒரு நாளைக்கு அந்த இடத்தில் போய்ப் பாருங்கள். அவர்கள் மாணவர்களை எல்லாம் நல்ல முறையில் வரவேற்பார்கள். வரவேற்கிறது மட்டும் அல்ல. எல்லா வகையிலும் உங்களை நன்றாக வரவேற்பார்கள். அதனால் அப்பேர்ப்பட்ட நிபுணர் நம்ம நகர மன்றத்துக்கு வந்தது ஒரு பாக்கியம், இந்த பொருட் காட்சி கமிட்டிக்கு அவர் வந்தது ஒரு பாக்கியம். எனக்கு நாலைந்து நாள் முன் வரைக்கும் வருகிறார்களோ, வரவில்லையோ என்ற ஒரு அதிர்ச்சி. எப்போதும் இந்த பொருட் காட்சி ஆரம்பிக்கிற நேரத்திலெல்லாம் ஒரு அதிர்ச்சி வருவது வழக்கம். அந்த அதிர்ச்சி இந்த வருஷம் பல விதங்களில் வந்தது. அதில் இது ஒரு வகை. "என்னடா இப்படி வந்து விட்டதே என்ன செய்வது" என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வந்து, டில்லிக்கு ஒரு ஜோலியாகப் போயிருக்கிறார். டில்லிக்குப் போய்விட்டு நம் பொருட்காட்சி திறக்கும் நேரத்திற்கு வர வேண்டுமே. ஊரெல்லாம் "ஐயா வருகிறார்" என்று சொல்லி விட்டோமே என்ன செய்வது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். பாருங்கள் உத்தமருடைய குணத்தை. வந்த உடனே திருநெல்வேலிக்கு ஒரு ட்ரங்கால் போட்டார் "நான் வந்து விட்டேன், உங்களுடைய பொருட் காட்சியைத் திறக்க வருகிறேன். ரயில்வே ஸ்டேஷனில் வந்து என்னை ஒருவரும் வரவேற்காதீர்கள்" என்று சொன்னார். பாருங்கள் எப்பேர்ப்பட்ட பெருந்தன்மையான குணம்! (கரகோஷம்). அப்பேர்பட்ட நிபுணர் நம்மிடம் வந்திருக்கிறார்கள்.

சரி இதில் நமது ஊருக்கு ஒரு யோகத்தைப் பாருங்கள். நமது ஊரிலே, நமது ஊரில் மாத்திரம்

என்ன, நமது திருநெல்வேலி மாவட்டத்திலேயே, தொழிலில் கொஞ்சம் பின் தங்கி யிருக்கிறோம். இப்பொழுதுதான் சொஞ்சம் முன்னால் வர ஆரம்பித் திருக்கிறோம். இன்னும் வரவேணும். வருகிறதற்கு இவருடைய அரிய உபந்நியாசம் நமக்கு மிக மிக அத்தியாவசியம், (கரகோஷம்). ஏனென்றால் சும்மா வயலிலோ, கட்டிடங்களிலோ பணத்தைப் போட்டுக் கொண்டிருந்தால் இனிமேல் பிரயோஜனம் இல்லை. இந்த மாதிரி தொழில், அநேக விதமான தொழில்கள் வளரவேண்டும். படித்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும், படிக்காதவர்களுக்கும் வேலை. எல்லாவிதமான வேலை வாய்ப்பும் அவரிடம் இருக்கிறது. நானும் தொழிலை லேசாக ஆரம்பித் திருக்கிறேன். நாளைக்குக் கொண்டு போய்க் காண்பித்துவிடுகிறேன். என்ன இம்ப்ரூவ்மெண்ட் (improvement) செய்யலாம் என்று கேட்டு விடுகிறேன். இந்த மாதிரி அப்பேர்ப்பட்ட நிபுணர் வந்தால் இங்குள்ள பிரபுக்கள், தனவந்தர்கள் எல்லாம் கண்டிப்பாக ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டியதுதான். ஆரம்பித்து 10 நூறு பேருக்கு வேலை கொடுக்க வேண்டியதுதான் என்று ஒரு ஊக்கம் ஏற்படும். அந்த ஊக்கமெல்லாம் ஏற்பட வேண்டும். நம் மாவட்டம், நம் நகர் தொழில் வளர்ச்சி பெறவேண்டும். இவருடைய ஆசியால் பெற வேண்டும் என்கிற ஒரு ஆசையுடன் அவர்களைப் போய் அண்டினேன். அவர்களும் சம்மதித்தார்கள். இங்கு வந்திருக்கிறார்கள் இந்தப் பொருட் காட்சியைத் திறந்து வைத்து விட்டார்கள். திறப்பு விழா சொற்பொழிவு ஆற்றப் போகிறார்கள். அரிய உபன்னியாசம் செய்வார்கள். ஆகையினால் அவர்களை மறுபடியும் உங்கள் சார்பாகவும், திருநெல்வேலி நகர மன்றத்தின் சார்பாகவும், திருநெல்வேலி

பொருட் காட்சி கமிட்டியின் சார்பாகவும், "வருக, வருக, வருக" என்று பன்முறையும் வரவேற்கிறேன். வரவேற்று, இந்த மலர் மாலையை உங்கள் சார்பாகவும், பொருட் காட்சி கமிட்டியாரின் சார்பாகவும், நகர மன்றத்தார் சார்பாகவும் அன்னாருக்கு சூட்டுகிறேன். (கரகோஷம்) அவர்கள் சொற்பொழிவு ஆற்றப்போகிறார்கள் அதை தயவு செய்து எல்லோரும் கேட்டு ஆனந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களின்
சொற்பொழிவு.

எனது அன்புமிகுந்த தலைவரே, மற்றும் எனது தோழர்களே,

எல்லோருக்கும் நமஸ்காரம். நான் இப்பொழுது என்ன பேசுவது என்றே தெரியாமல் இருக்கிறேன். இரண்டு நாளாக எதைச் சொல்லுவது என்று யோசித்தவண்ணமாகவே இருக்கிறேன். இப்பொழுது எனக்கு எங்கும் அளிக்கப்படாத வகையில் ஒரு பெரிய வரவேற்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு பதில் என்ன சொல்லுவது? என்னுடைய வழக்கம், எங்கு சென்றாலும், எதைச் செய்தாலும், எதை நினைத்தாலும், அவைகளில் தப்புகள் என்ன இருக்கின்றது? கெடுதல்கள் என்ன இருக்கின்றது? என்பதை முதலில் பார்த்து அதை ஒழித்துவிட்டுத் தான் பிறகு ஏதாவது செய்வதும், சொல்லுவதும், நினைப்பதும்.

அம்மாதிரியாக இங்கு இருக்கும் தப்புகளைச் சொல்லும்பொழுது எல்லோருக்கும் மனதுக்கு வருத்தமாக இருக்கும். அதனால் அந்தத் தப்புகள் என்ற பாகத்தை விட்டுவிட்டு, சந்தோஷமாக எல்லோரும் கேட்டுவிட்டுப் போகும்படியானவைகளை மாத்திரம் சொல்லுகின்றேன்.

அதில் எனக்குக் கொடுத்த வரவேற்பு முதல் நிகழ்ச்சி. மிகவும் சந்தோஷகரமானது. எனக்கு

எங்கும் கிடைக்காதது ஒன்று கிடைத்தது. என்னுடைய வாழ்நாளில் இந்த மாதிரியான வரவேற்புகளுக்கு நான் ஒத்துக்கொள்வதுமில்லை, போவதுமில்லை. இங்கு அகஸ்மாத்தாக இவ்விடத்தில் நமது நகரசபைத் தலைவர் வந்து அழைத்து ஏதோவொரு விதத்தில் ஒத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அதற்குக் கொடுத்த வரவேற்பிற்கு எனது மனமார்ந்த நன்றியையும், சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு ஏதாவது உபயோகமுள்ள தொழில்களை நடத்தவோ, நடத்தும் முறைகளைச் சொல்லவோ, இந்த இடம் சரியானதல்ல. ஏனென்றால் மிகவும் அதிக நேரம் ஆகும். மிகவும் விளக்கமாகச் சொல்ல வேண்டிவரும். அவற்றைச் சொல்லுவதற்கு இந்த இடம் சரியான இடம் அல்ல. ஏனென்றால் அதிக நேரம் இருக்க முடியாது. ஒவ்வொரு இடங்களில், அதாவது கல்லூரிகளிலும், சில இண்டஸ்டிரியல் ஸ்தாபனங்களிலும் நான் பேசும்பொழுது, உதாரணமாக, காரைக்குடியில் மாணவர்களுக்குச் சில அறிவுரைகளைச் சொன்னேன் – 2 மணிக்கு ஆரம்பித்து $6\frac{3}{4}$ மணி வரை ஆயிற்று. அதே மாதிரி அண்ணுமலை யுனிவர்சிடியில் மாலை 5 மணிக்கு ஆரம்பித்து இரவு $2\frac{3}{4}$ மணி ஆயிற்று. திருச்சிராப்பள்ளியில் செயிண்ட் ஜோசப் கல்லூரியில் 5 மணிக்கு ஆரம்பித்து இரவு 10 மணி வரை ஆயிற்று.

இதே மாதிரி ஜெர்மனியிலும் ஒரு காலேஜில் 11 மணிக்கு ஆரம்பித்து 3 மணிக்கு முடிந்தது. அந்த மாதிரி ஏதாவது சொன்னுல் அதிலிருந்து ஏதாவது உபயோகப்படலாம். ஒரு பாதிப்பேராவது அதன்படி நடக்கலாம். அதன் பயனை அடையலாம்.

இம்மாதிரியான இடங்களில் சொல்லுவதில் கேட்கும் வரைக்கும் மிக இனிமையாக இருக்கும். இதே இடத்தில் ஒரு பாட்டுப் பாடினல் பாட்டைக் கேட்கும் வரை ரொம்பவும் இனிமையாக இருக்கிறது. இந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே போனதும் உடனே மறந்து விடுகிறோம். அதனல் எந்தப் பயனும் அடைவதில்லை. அதே மாதிரிதான் இங்கே சொன்னலும், மிகவும் நன்ருக இருக்கிறது, ரொம்பவும் நல்லதுதான் என்று நினைக்கலாம், சொல்லலாமே தவிர அதன்படி ஒருவரும் நடக்க முடியாது. அதனல் இங்கே பேசவும் முடியாது. அந்த மாதிரி உள்ள விஷயங்களை புஸ்தக வடிவாகவோ — புஸ்தக வடிவமாக உள்ளதற்கும் கூட முடியாதுதான். காரியங்களில் செய்து காட்டுகிறேன். அதை எல்லோரும் பார்த்து, அதே மாதிரி ஒவ்வொரு இடங்களிலும் ஆரம்பிக்கும் பக்ஷத்தில் அது மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும். ஆனல் அதிலும் நாம் தோல்வியேதான் அடைந்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். 15 வருஷங்களாக, காலேஜுகளில் 5 வருஷம், 3 வருஷம் சைன்ஸ், இன்ஜினீரிங் கோர்சுகள் வைத்து நடத்திக் கொண்டு வருகிருர்கள். அதை கோயம்புத்தூரில் ஒரு பாலி டெக்னிக் ஆரம்பித்து, அதில் நானே பிரின்சிபாலாக இருந்து, முதலில் 4 வருஷம் கோர்சை ஒரு வருஷத்தில் முடித்து, 4 வருஷம் படித்த மாணவர்களை விட அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றும், அதிக மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றும் கூட டிப்ளோமா கொடுக்க மறுத்து விட்டார்கள் கவர்ன்மெண்டில். அதன் பேரில் அதை ராஜீனமா செய்து விட்டு வேறு அதற்குப் போட்டியாக ஒன்று ஆரம்பித்து, அதை ஆறு வாரத்தில் முடித்துக் கொண்டிருக்கிறேன், அதாவது, மூன்று வருஷத்தில் மற்ற பாலி டெக்

ணிக்குகளில் என்ன சொல்லிக் கொடுக்க முடியுமோ, அதை விட இரண்டு மடங்கு உபயோக முள்ளதும், பிற்காலத்தில் அந்த மாணவர்களுக்கு மிகவும் பயன ளிக்கக் கூடியதுமான முறையில் ஆறு வாரத்தில் சொல்லிக் கொடுக்க முடியும் என்பதை ஒவ்வொரு வருஷமும் காட்டிக் கொண்டு வருகிறேன். அரசாங் கத்தில் எல்லோரிடத்திலும் பணம் வரி மூலமாக ரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக் கொண்டு தான் இருக்கிறார்கள். உறிஞ்சட்டும், இருக்கிறவர் களிடத்தில்தான் உறிஞ்சுகிறார்கள், உறிஞ்சட்டும், உறிஞ்சி, அதை சரியானபடி உபயோகப் படுத்தினால் எல்லோரும் சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்தில் ஏற்படுத்திய தனி முறையை கூறுகிறேன். அந்த முறையை ஒரு துளி யும் கூட மாற்றவில்லை. மாற்றுகின்றேன், மாற்று கின்றேன் என்று சொல்லி சிலதை மாற்றி இருக் கிறதையும் கெடுத்திருக்கிறார்களேயன்றி ஒரு பிர யோஜனமும் இல்லாமல்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். (கரகோஷம்)

ஆனால் இதை நான் அரசாங்கத்தைக் கண்டிக்கி றேன் என்று நினைக்கக் கூடாது. நாம் நினைக்கா விட்டாலும் அரசாங்கம் அப்படித்தான் நினைக்கும். (சிரிப்பு.) யாராவது, ஏதாவது ஒரு தப்பு ஒன்று சொல்லும் பக்ஷத்தில் "வேண்டுமென்றே, அவர் களுக்கு அதிகாரம் ஒன்றும் கிடைக்கவில்லை, அதனால் திட்டுகிறார்கள், பேசுகிறார்கள்" என்றுதான் சொல்லுகிறார்கள்.

ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார், இப்பொழுது எடுத்துச் சொல்லுகின்றாரே, அரசாங்கத்தில் உள்ள தவறுகள், அவைகள் முழுவதும் உண்மையேதான்.

அதில் ஒன்றும் தவறு இல்லே. (கரகோஷம்.) ஆனல் அவருக்கு அரசாங்கத்தில் ஒரு பதவியும் கொடுக்க வில்லே, அதிலிருந்து தள்ளி விட்டார்கள், அதனல் சொல்லுகிருர் என்று சொல்லுகிருர்கள். அது வாஸ்தவம் அல்ல. அவர் இருக்கின்ற உண்மையைச் சொல்லுகின்ருர். ஓய்வு காலத்தில் பொய் சொல்ல அவசியமில்லே. அதேமாதிரி ஆச்சாரியாரே இன்னும் அதிககாலம் இருக்கமாட்டார் என்று சொல்லுகின்ருர். ஓய்வு காலத்தில் பொய் சொல்லவேண்டிய அவசிய மில்லே. அது வாஸ்தவம்தான் (கரகோஷம்) மற்றும் அரசாங்கத்தில் எந்தப் பதவியும் எதிர்பார்க்கவில்லே. அந்த மாதிரி இருந்து அவர் உள்ளத்தில் இருக்கிற உண்மைகளேத்தான் சொல்லுகிருரே தவிர அவர் வேறு ஒன்றும் சொல்லவில்லே. அதை ஒரு துளி யாவது அரசாங்கம் ஆலோசிக்கவுமில்லே. அவரை ஒரு விரோதியாக எடுத்துக்கொண்டு அவர் சொல்லுவ தைக் கண்டிக்கிருர்களே ஒழிய, அவர் சொல்பவை களே சரி செய்யலாம், அதிலுள்ள தப்புகளே நிவர்த்தி செய்யலாம் என்று ஒருவருக்கும் தோன்ற வில்லே. அப்படி யாராவது சிலபேருக்குத் தோன்றி யிருந்தாலும் கூட அதைச் சொல்லுவதற்கு தைரியம் வர வில்லே. அப்படிச் சொன்னலும் இப்பொழுது இருக்கின்ற அரசாங்கத்தின் முறையினல் எதையும் செய்யவும் முடியாது. இப்பொழுது அரசாங்கத்தில் செய்கின்ற ரூல்ஸ், ஆக்டுகள் அந்த விதிகள் எல்லாம் லஞ்சத்தையும், red tapism என்று சொல்லுவார் களே, அதையும்தான் உற்பத்தி செய்கிறது – இந்தி யாவில் எது அதிக உற்பத்தி என்ருல், Corruption and red tapism தான். (பலத்தகரகோஷம்) அதற்கு அடுத்ததுதான் விவசாயப் பொருள்கள் அல்லது இன்ஜினீரிங் பொருள்கள் உற்பத்தி ஆகின்றன என்று சொல்லலாமே தவிர, அதிக உற்பத்தி அது

தான் ஆகிறது. அதை நான் சில ஆபீசர்களிடம் சொல்லியிருக்கிறேன், சில வழிகள். Corruption என்பதே அடியோடு இல்லாமல் செய்யலாம். ஒரு கஷ்டமும் இல்லாமல் செய்யலாம் எந்த ஜனங்களுக்கும் பிரியப்படும் வழியில் செய்யலாம் என்று மிஸ்டர் கண்ணப்பரும் நானும் அந்த ஆபீசர், — இந்தியாவிலேயே பெரிய ஆபீசர், அவரிடத்தில் பொய்ச் சொன்னேம். "நீங்கள் சொல்லுவது எல்லாம் சரிதான். நான் இதை மந்திரிகளிடம் சொன்னால் என்னையே வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்". (கரகோஷம்) என்று சொன்னர். இதே கண்ணப்பர் இங்கேதான் இருக்கிறர். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்புதான் இது நடந்தது.

இதே மாதிரி மற்ற தெசங்களிலும் செய்திருக்கிறர்கள். ஒரு கஷ்டமும் இல்லாமல் Corruptionனை ஒழித்து விடலாம். ஆனல் Corruption-னை ஒழிப்பதற்காக ஒரு டிபார்ட்மென்டை வைத்து, அநேகம் பணத்தை வீணக்கிக் கொண்டுதான் இருக்கிறர்கள். எங்கேயாவது ஒரு கான்ஸ்டேபிள் 30 ரூபாய் சம்பளத்தில் இருபவன், இப்பொழுது, தாய், தகப்பனர், இரண்டு குழந்தைகள், சம்சாரம் ஆக ஐந்து, ஆறுபேர் இருந்தால் ஒவ்வொருவருக்கும் 20 ரூபாய்க்குக் குறையாமல் ஒரு மாதத்துக்கு சிலவு, இந்த ஆறு பேருக்கும் 120 ரூபாய்கள் வேண்டும். அவனுக்கு 30 ரூபாய் இருந்தால், தினம் ஒரு ரூபாய், அரை ரூபாய் எங்கேயாவது சம்பாதித்துத்தான் ஆக வேண்டும். அந்த Corruption-னை தான் போய்ப் பிடிக்கிறர்கள். (சிரிப்பு.) அவன் எப்படியும் காலையில் எழுந்திருந்தால் பசிக்கு ஏதாவது ஒன்று செய்து தான் ஆகவேண்டும் எங்கேயாவது 10 அணு, ஒரு ரூபாய் வாங்கினன் என்றல் அது Corruption-னே

அல்ல என்றுதான் சொல்ல வேண்டும் இப்பொழுது. சம்பளம் 100 ரூபாய் 150 ரூபாய் கொடுத்து விட்டு அப்புறம் Corruption இருக்கிறது என்று பிடித்தால் அது சரி. சம்பளமும் அதிகம் கொடுப்பதில்லை, இருக்கிற சம்பளத்திலேயே சரிப் படுத்த வேண்டும். விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டே போகிறது. அதில் பிடிக்கிற Corruption-ஐத்தான் பிடித்து ஜெயிலில் போடுகிறார்கள்.

ஆனால் மேலும் நான் சொல்லுவேன். நம் நாட்டிலுள்ள ஏறக்குறைய எல்லா வியாபாரிகளும், மற்ற நாட்டினரைவிட மிக நாணயமுள்ளவர்கள். ஆனால் இன்று ஒவ்வொரு வியாபாரியும் ஒவ்வொரு கொள்ளைக்காரன் என்றுதான் சொல்லலாம். (பலத்த கரகோஷம்). அந்தக்கொள்ளைக்காரர் யாரால் கொள்ளைக்காரர் ஆனது என்றால், வியாபாரம் என்பது நாணயத்துடன் செய்வதுதான் வியாபாரம். அந்த மாதிரிதான் ஒவ்வொரு வியாபாரியும் செய்துகொண்டு வருகிறான். அந்த வியாபாரிகளை லஞ்சம் கொடுக்கப் பழக்கினதும், லஞ்சம் கொடுக்க சந்தர்ப்பம் ஏற்படுத் தினதும் கவர்ன்மெண்டுதான். (பலத்த கரகோஷம்.) முதலில் இந்த கவர்ன்மெண்டைத்தான் ஜெயிலில் போடவேண்டுமே தவிர, வியாபாரிகளை அல்ல. (பலத்த கரகோஷம்). மனசாட்கிக்கு விரோதமில்லா மல் இருக்கிற வியாபாரிகள் அநேகம் பேர் இருக் கிறார்கள். 100க்கு 99 பேர் அந்தமாதிரி இருக்கிற வர்கள்தான். ஆனால் 99 பேரும் இன்றைக்கு லஞ் சம் கொடுக்காமலும் அல்லது வேறு புரட்டு செய்யா மலும் வியாபாரம் செய்கிறார்களா என்று கேளுங்கள். ஒருவராவது கிடையாது என்று நான் சத்தியம் செய்ய முடியும். (கரகோஷம்) நானும் ஒரு வியா பாரி. எத்தனையோ வியாபாரம் செய்திருக்கிறேன்.

ஒன்றிலாவது புரட்டு இல்லாமல் செய்ததே கிடையாது. (சிரிப்பு, கரகோஷம்.) இவ்வளவு தடவை இந்தியாவை விட்டு வெளியில் போயிருக்கிறேன். ஒரு தடவையாவது புரட்டு செய்யாமல் நான் போனதே கிடையாது. (பலத்த சிரிப்பு.) எக்ஸ்சேன்ஜில் எவ்வளவோ ரெஸ்டிரிக்ஷன் செய்திருக்கிறார்கள். அந்த ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருந்தும் கூட நான் போய் வந்து கொண்டு இருக்கிறேன். இதே உபன்னியாசம் செய்து கொண்டிருக்கிறேன், நான் செய்தது, வேண்டுமென்றே கவர்ன்மெண்டுக்குக் காட்டுவதற்காகவே செய்து கொண்டு இருக்கிறேன். ஆனால் அங்கே பணம் சேர்த்து வைக்கலாம் என்று வெகுபேர் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவர்களையும் ஒன்றும் செய்யமுடியவில்லை கவர்ன்மெண்டிலே. ஏனென்றால், அவர்களை ஏதாவது பண்ணினால், அவர்கள் எல்லோரும் சேர்ந்து, மந்திரிகளை எல்லாம் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அந்த பயத்தினால் அவர்களையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்புறம் Corruption, red tapism அதிகமாக ஆகாத படிக்கு என்ன செய்ய முடியும். இந்த கவர்ன்மெண்டினாலே? இந்த கவர்ன்மெண்டு இப்பொழுது இருக்கிறபடி எந்த விதத்திலேயும் இந்த Corruption production-ஐ நிறுத்தவே முடியாது. அது வேறு எப்படி ஆகுமோ, என்ன ஆகுமோ தெரியாது.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன், ஜோசியத்தில், பிப்ரவரி 5-ம் தேதி ரொம்பவும் கெடுதல் இந்த உலகத்துக்கு உண்டாகும், நமது நாட்டுக்கும் உண்டாகும் என்று பேப்பரில் போட்டிருந்தார்கள். நானும் ஜோசியம் படித்திருக்கிறேன். ரொம்ப காலத்துக்கு முன்பு ஜோசியம் படித்து, அந்த ஜோசியத்தில் நான் 37 பேரைக் கொன்று இருக்கிறேன்.

(சிரிப்பு.) நான் கொன்றதற்கு ஒன்றும் எனக்கு தூக்கு தண்டனை கிடையாது. (சிரிப்பு.) ஜோசியத்தில் கொன்றால் ஒன்றும் கிடையாது. அதில் நிறைய அனுபவம் இருக்கிறது. அதைப்பற்றி இங்கே சொல்லி பிரயோஜனம் கிடையாது. அந்தக் கதைகளை எல்லாம் இங்கே சொன்னால் ரொம்ப நேரம் ஆகும். அந்த அனுபவங்களை எல்லாம், வைத்து, ஊரில் 45 குடும்பம் இருக்கிறது, 45 தலைவர்களும், முக்கியமாக அந்தக் குடும்பத்தில் இருப்பவர்கள். எல்லாம் 3 வருஷங்களில் செத்துப்போய் விடுவார்கள் என்று எழுதி வைத்தேன். 37 பேர்கள் செத்துப் போய் விட்டார்கள். அதில் நான் சாகவில்லை. நான் ஒருவன் சாக வேண்டியவன். நான் சாகவில்லை. இன்னும் ஏழெட்டுப் பேர் சாகவில்லை. எதனால் சாகவில்லை என்று திரும்ப யோசித்தபொழுது, ஜோசியத்துக்கும், மனிதனுக்கும் சம்பந்தமே கிடையாது என்கிற முடிவுக்கு வந்தேன். அதேமாதிரி லெக்சர்களும் கொடுத்திருக்கிறேன். "Astrology makes more deaths than any other diseases, than any other germs of plague, cholera or typhoid" என்று லெக்சர் கொடுத்திருக்கிறேன், அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய இடங்களில் எல்லாம். இங்கேயும் அதே மாதிரி லெக்சர்ஸ் கொடுத்திருக்கிறேன். அந்த அனுபவத்தை வைத்து, "இந்த பிப்ரவரி 5-ம் தேதி ஒன்றும் நடக்காது, ஒரு சம்பந்தமும் கிடையாது அந்தக் கிரகங்களுக்கும் இதற்கும். ஆனால் நம்ம ஊரிலேயே கிரகங்கள் பிடித்திருக்கிறதே (சிரிப்பு) அதாவது இந்த விலை ஏற்றம், ரூபாய் inflation இது இரண்டுக்கும் காரணமாய் இருந்த பிளான் (plan.) 1st plan, 2nd plan, 3rd plan. (சிரிப்பு) இந்தப் பிளான்களினாலே 1964 வது வருஷம் அல்லது 1965-வது வருஷத்திலே, ரொம்ப கஷ்டங்

கள் வரும். கவர்ன்மெண்டே மாறினாலும் மாறும். Army rule அல்லது Civil rule, Communism வந்தாலும் வரலாம்'' என்று எழுதினேன். அதை இங்கிலிஷ் பேப்பர் எதிலும் போடவில்லை. தமிழ் பேப்பர்கள் தான் இரண்டொன்றில் போட்டிருந்தார்கள். அந்த மாதிரி ஏதாவது வரலாம். ஏன் வரலாமென்றால் இப்பொழுது 3rd பிளான் ஆரம்பித்திருக்கிறது. முதல் பிளானுக்கு முன்பு இங்கு விலைகள் என்ன இருந்தது, (population) ஜனத்தொகை என்ன இருந்தது, ரூபாயினுடைய மதிப்பு என்ன இருந்தது, முதல் பிளானின் கடைசியில் என்ன ஆயிற்று. இரண்டாவது பிளானின் கடைசியில் எப்படியிருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால் அப்பொழுது தெரியும். வேலையில்லாது போகிறவர்கள் கோடிக் கணக்கில் வந்துவிடும். அதாவது பாபுலேஷன் இன்கிரீஸ் ஒன்று, இப்பொழுது இருக்கிறதை ஆடோமேடிக் மெஷின்களாக செய்கிறார்கள். சாதாரண பழைய நூல்நூற்கிற யந்திரங்களெல்லாம் ஆட்டோமேட்டிக்காக செய்யவேணும், இன்னும் வேறே எல்லாக் காரியங்களும் ஆடோமேடிக்காக செய்ய வேணுமென்றுதான் ஆரம்பிக்கிறார்கள். ஏதனுலென்றால், இப்பொழுது இருக்கிற தொழிலாளர்களுடைய தொந்திரவு பொறுக்க முடியாதபடிக்கு, இந்த வெள்ளைக்காரக் கூட்டமிருக்கிறதே (வியாபாரக்கூட்டம்) அதையெல்லாம் ஆடோமேடிக் மெஷின் வைத்து செய்து கொண்டால் இவ்வளவு தகராறு இருக்காது என்று நினைக்கிறார்கள். நானும் அதே மாதிரிதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். எல்லாம் ஆடோமேடிக் மெஷின் வைத்து ஒரு ஆளும் கூட இல்லாதபடிக்கு நடக்க வேணுமென்று நானும் பிரியப்படுகிறேன். அந்த மாதிரி நடக்கும்போது இப்பொழுது வேலையி

விருக்கிற ஆட்களுள் கொஞ்சம் பேருக்கு வேலை கிடைக்காமல் போகிறதோடுகூட இதிலிருந்து இன்னும் 5 வருஷத்திற்கு உற்பத்தியாகிற பையன்கள் இருக்கிறார்கள் அல்லவா, அந்தப் பையன்கள் $1\frac{1}{2}$ கோடி வரைக்கும் வேலையில்லாமல் போய்விடும். அப்பொழுது 5-வது வருஷம் இப்பொழுது என்ன விலை இருக்கிறதோ, இந்த விலைகளை விட 25%-டோ 50%-டோ சாமான்களுக்கு விலை ஏறிப்போகும் வேலை ஆட்கள் இருக்கிறார்களே அவர்களெல்லாம் பஸ் சர்விஸ் (என்னிடமும் பஸ் சர்விஸ் இருக்கிறது) சினிமா சர்விசில் இருக்கிறவர்கள், காபி கிளப்பில் இருக்கிறவர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், மில் தொழிலாளர்கள் இவர்களுக்கெல்லாம் சம்பளம் ஏறிப்போகும் இனியும் 3 அல்லது 4 வருஷத்தில். ஏனென்றால் ஒரு கட்சி சேர்ந்து ஒரு ஸ்ட்ரைக் ஆரம்பித்தால் 10%, 20% ஏறிப்போகும். அவர்களுக்கு மாத்திரம் சம்பளம் ஏறிப்போகுது. ஆனால் மற்றவர்களுக்கு, கவர்ன்மெண்டில் வேலை செய்கிறவர்களுக்கு, மற்ற வியாபார ஸ்தலங்களில் வேலை செய்பவர்களுக்கு உயரப்போவதில்லை. அவர்கள் இப்பொழுது வாங்குகிற சம்பளத்தைக் கொண்டு, இனி விலை ஏறுகிற சந்தர்ப்பத்தில் அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது. அந்த மாதிரி நிலைக்கு வருகிறது. இந்த கொஞ்சப் பேர்கள் போக பாக்கியிருக்கிற ஆட்கள் எல்லோரிலும் ரொம்பப் பேர் விவசாயத்தில் இருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் வருஷத்தில் ஆறுமாதம் வேலையில்லை. அந்த மாதிரி ஆட்களும், இந்தப் பாபுலேஷன் ஜனத்தொகை விருத்தியாகிறதே அதிலிருக்கிறவர்களும் சேர்ந்து எல்லோருக்கும் சாப்பாட்டிற்கே திண்டாட்டம் வரப் போகிறது. அப்பொழுதுதான் எல்லோருக்கும் ஒரு மாறுதல் ஏற்படும். அந்த மாறுதல் எந்த மாதிரி மாறுதல் என்று

இப்பொழுது சொல்ல முடியாது. அதையெல்லாம் தடுக்கலாம். இப்பொழுது அரசாங்கம் கண் திறந்து பார்த்து தான் செலவழிக்கிறதை சரியானபடி செல வழித்து, (வரும்படிக்கு வேணுமென்ருல் இனியும் பிழியட்டும்) எல்லோரிடத்திலும் பிழிந்தெடுக்கட்டும் அது சந்தோஷந்தான். பிழிந்தெடுத்து அதை சரி யான வழியில் உபயோகப் படுத்திஞல் இன்னும் எல்லோருக்கும் செல்வம் விருத்தியாகும், அறிவும் விருத்தியாகும். எல்லோரும் சந்தோஷமாகவும் இருக்கலாம். அதைத் தவிர்த்து வேறு வழியில் போகிருர்கள்.

இப்பொழுது ஒரு கார் ஒன்று 13,000/– ரூபாய்க்கு விற்கிருர்கள். ஒரு ஹிந்துஸ்தான் கார் அல்லது ஒரு ஸ்டாண்டர்டு கார் 5,000/– க்குச் செய்ய முடியுமா என்று யோசனை செய்துகொண்டு இருக்கிருர்கள். ஆனுல் அது வரப்போகிறதில்லை. 5,000/– க்குச் செய்தால், இந்த 13,000/– க்கு விற்கிறது போய்விடுமே என்று அவர்கள் தடங்கல் பண்ணி, இந்தக் கார் வராமல் செய்யப்போகிருர்கள். சாதாரணமாக இந்த மாதிரி கார்கள் வெளி நாட்டில் 6,000/–, 7,000/– க்கு விற்கிறது. அங்கே ஒரு ஆளுக்கு ஒரு மணிக்கு 10 ரூபாய் அல்லது 15 ரூபாய் சம்பளம். ஒரு மணி நேரம் வேலை செய்தால் 10 ரூபாய், 15 ரூபாய் சம்பளம். அந்த மாதிரி கூலி கொடுத்தும் ஒரு கார் செய்வதற்கு 6,000/– ரூபாய். நம் ஊரிலே ஒரு நாளைக்கு 10 ரூபாயும்கூட இல்லை. 8 மணி நேரத்திற்கு 10 ரூபாயும்கூட இல்லை. 8 மணி நேரத்திற்கு 4 ரூபாயும்கூட இல்லை. 2 ரூபாய், 3 ரூபாய் தான் கொடுக்கிருேம். அவ்வளவு கம்மியாகக் கொடுக்கிற நாட்டிலே ஒரு கார் செய்தால் 13,000/– ரூபாய் ஆவதற்கு என்ன காரணம்? அந்தக்

காரணத்தைக் கண்டுபிடித்தால் அல்லவா இப்பொழுது இருக்கிற கார்களை 4,000/-, 5,000/- க்கு விற்க முடியும்? அதைச் செய்யாதபடிக்கு அந்த மாதிரி உள்ள வியாபாரங்களை எல்லாம் அதேமாதிரி வேண்டிய ஆட்களுக்கு விட்டுவிட்டு இருக்கிறார்கள். கடியாரங்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருந்தால், ஒரு கோடி, அரை கோடிக்குக் கொடுத்திருந்தாலே போதும், அதை யாரும் மீற மாட்டார்கள். அதற்கு மேல் வாங்கமாட்டார்கள். Import பண்ணக்கூடாது என்று தடுத்தார்கள். 12 கோடி ரூபாய் கடியாரங்கள் இந்தியாவுக்குள் வந்திருக்கின்றன. இவர்கள் பிடித்திருப்பதெல்லாம் 5, 6, லக்ஷம் இருக்கலாம், அல்லது 10 லக்ஷம் இருக்கலாம். 12 கோடி ரூபாய் கடியாரங்கள் 3 வருடங்களில் இந்தியாவுக்குள் வந்திருக்கின்றன. இவர்கள் பிடிக்கிறார்களாம் கஸ்டம்சில் ஸ்பெஷல் டிபார்ட்மெண்டைப் போட்டுப் பிடிக்கிறார்கள். பிடித்து என்ன? யாராவது 4 பேர், டேப் ரிக்கார்டர், கொண்டுவருவார்கள், வெளி நாட்டுக்குப் போய் வருபவர்கள், அவர்களைப் பிடித்து, அவர்கள் ஏதாவது தப்பு ஸ்டேட்மெண்டு கொடுத்தார்கள் என்று ஜெயிலில் போடுவார்கள். ஆனால் அங்கு கோடிக்கணக்கில் இருக்கிறதை சும்மா விட்டிருக்கிறார்கள். நமது நாட்டிலே இன்றைக்கு இந்த 3rd plan என்று போடாதபடிக்கு வேறு மாதிரி பிளான் போட்டார்கள் என்றால், 4,000/- கோடி ரூபாய் நமது நாட்டிலேயே சம்பாதிக்கலாம். வெளி நாட்டில் போய் பிச்சை எடுக்கவேண்டியதில்லை. அதை விட்டுவிட்டு, இங்கே இருப்பதை விட்டுவிட்டு, அங்கே போய் எதற்காகப் பிச்சை எடுக்கிறார்கள்? நான் இங்கே இதையெல்லாம் சொன்னால், கவர்ன்மெண்டைத் தாக்குவதற்காகவே நான் வந்திருக்கிறேன் என்று ஆகிறது. அதனால்

இதை இதோடு விட்டுவிடுகிறேன். இந்த மாதிரி ஆரம்பித்தால் இதே இன்னும் இரண்டு மணி நேரம் வேண்டுமானால் ஆகும். நான்கு மணி நேரம் வேண்டுமானாலும் ஆகும். அதனால் நான் இதை இதோடு நிறுத்திவிடுகிறேன். இங்கே வந்ததற்கு உங்களுக்கு என்ன சொல்லவேண்டுமோ அதை மாத்திரம் இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி நிறுத்தி விடுகிறேன்.

இப்பொழுது இந்த எக்ஸிபிஷனுக்கு என்பதாயிரம் ரூபாய் சிலவு செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இதுவும்கூட சொல்லக்கூடாது. (சிரிப்பு). இவ்வளவு அன்போடு வரவேற்புக் கொடுத்து, இந்த டோஸ் கொடுக்கிறது (பலத்த கரகோஷம், சிரிப்பு) சரியல்ல. [பரவாயில்லை, நன்றாகச் சொல்லுங்கள் – (சிரிப்பு, கரகோஷம்) எங்களுக்கு ideaவும் இல்லை. இனிமேல் நாங்கள் எந்தவிதமாக நடத்துகிறது என்பதை நன்றாகச் சொல்லுங்கள். (பலத்த சிரிப்பு, கரகோஷம்)].

அதைத்தான் சொல்லப்போகிறேன். நான் பள்ளிக்கூடத்திற்குப் போனதில்லை. எழுத்துக்கள் மாத்திரம், அந்தக் காலத்தில் மணல் போட்டு அதில் குச்சியால் எழுதி எழுதி தமிழ் எழுத்துக்கள் எழுதப் பழகியிருக்கிறேன். தமிழ் எழுத்துக்கள் பழகும்போது, உபாத்தியாயர் கண்ணில் மணலை எடுத்து அடித்து, பிறகு உபாத்தியாயர் என்னை வைத்துக்கொள்வதில்லை என்று சொல்லிவிட்டார். அதோடு தீர்ந்தது. (சிரிப்பு). பின்னும் ஏதேதோ குறும்புகள் எல்லாம் பண்ணி என்னைத் தோட்டத்தில் வைத்துவிட்டார்கள். அங்கு ரொம்ப சவுகரியமாக இருந்தது தமிழ் படிப்பதற்கு. தமிழில் அந்தக் காலத்தில் அச்சில் இருந்த புத்தகங்கள் பூராவும்

படித்திருக்கிறேன். அச்சில் இருந்தது என்றால், வேண்டியது, வேண்டாதது எல்லாம் படித்திருக்கிறேன். சந்தையில் காலணா, அரையணாவிற்கு கூளப்ப நாயக்கன் காதல் முதலியன விற்றது, அவைகளையும்கூட வாங்கிப் படித்திருக்கிறேன். அதேமாதிரி, தமிழ்ச் சங்கத்தில் வைத்திருந்த, பிரவேச பண்டித பரீக்ஷை, பால பண்டித பரீக்ஷை, பண்டித பரீக்ஷை முதலியவைகளுக்கு உள்ளதை எல்லாம் பூராவாகவும் படித்திருக்கிறேன். படித்து விட்டு சமஸ்கிரதமும் படித்தேன். சமஸ்கிரதமும் படித்து, அதில் நீதி சாஸ்திரத்தைத் தமிழில் பாடினேன். அதேமாதிரி தொல்காப்பியத்திற்கு தொல்காப்பியப் பாயிர விருத்தி எழுதினார் அரசன் ஷண்முகனார் என்பவர். அந்தப் பாயிர விருத்திக்குப் பாயிர விருத்தி எழுதினேன். இன்னும் ஏதேதோ புத்தகங்கள் பாடியிருக்கிறேன், எல்லாம் எழுதியிருக்கிறேன்.

அப்புறம் கடவுளைப் பற்றியும், சோதிடத்தைப் பற்றியும், வைத்தியத்தைப் பற்றியும் படித்தேன். வேதாந்தம் முதலியன படித்து, அதையெல்லாம் விட்டுவிட்டு, வைத்தியத்தில் மாத்திரம் சில பாகங்கள் சரியானது என்று எடுத்தேன். தமிழில் என்ன படிக்கவேண்டும் என்பதை, அதைத் தனியாக எடுத்துவைத்து அதில் என்னிடம் தமிழ் படிக்க வந்தவர்கள் சில பேர் இருக்கிறார்கள், அவர்களுக்கு இதைத்தான் படிக்கலாம் என்று படிக்கக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இங்கே வந்து அதைச் சொல்வது சரியில்லைதான். இது சரியான தமிழ்நாடு தான். தமிழ் நாட்டில் முதல்தரமான தமிழில் லெக்சர்ஸ் கொடுத்திருக்கிறேன். "**Tamil makes half cracks and miserable misers**" என்றும்

பேசியிருக்கிறேன் – (சிரிப்பு.) அது எங்கே பேசி யிருக்கிறேன் என்றால், "All Tamilian Conference at Madras" அந்த மாநாட்டில் போய் 2¼ மணி நேரம் பேசியிருக்கிறேன். இந்த லெக்சருக்குக் காரணம் என்னவென்றால், இப்பொழுது தமிழ் புத்தகங்கள் இருக்கின்றனவே, அந்தத் தமிழ் புத்தகங்களில் நாவல்கள், சரித்திரம் இன்னும் ஏதேதோ புத்தகங்கள் எழுதி இருக்கிறார்கள். அவைகளில் ரொம்ப மோசமான புத்தகங்கள் இருக்கின்றன, நல்லவைகளும் இருக்கின்றன. நல்லவைகள் ரொம்பவும் குறைந்துவிட்டன இப் பொழுது. முற்காலத்தில் நல்லவைகள் அதிகமாக இருந்தன. மோசமானது கொஞ்சமாக இருந்தது. அது இப்பொழுது என்ன ஆயிற்று? நல்லது அதே அளவில் இருக்கிறது, அல்லது கொஞ்சம் குறைந்து விட்டது. இப்பொழுது மோசமான கதைகளும், மற்றவைகளும் எழுதி, அந்தப் புத்தகங்கள் தான் மிகவும் அதிகமாகிவிட்டது. சின்னக் குழந்தைகளை எடுத்துக்கொண்டுபோய் படிக்கச் சொன்னால், அவர்களுக்கு நல்லது இன்னது, கெட்டது இன்னது என்று எப்படித் தெரியும்? எது கிடைத்தாலும் எடுத்துப் படிக்கிறார்கள். படித்து அதில் கெட்டுத் தான் போகிறார்கள். ரொம்ப இடங்களில் போய் நானே ஆராய்ச்சி பண்ணியிருக்கிறேன். நானே போய் சில ஹாஸ்டல்களில் தங்கிப் பார்த்திருக்கிறேன். பள்ளிக்கூடங்களுக்குப் போகவில்லை, இருந்தாலும் சில ஹாஸ்டல்களுக்குப் போய், மாணவர்களின் விருந்தாளியாக இருந்து, ஒவ்வொருவரும் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்? என்ன படிக்கிறார் கள்? அவர்கள் குணம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்திருக்கிறேன். அதில் "White ants for Young Indian Brains" என்று

சொல்லி ஒரு புத்தக லிஸ்டே எடுத்திருக்கிறேன். தெரியாதபடிக்கு நமது பையன்கள் படித்தார்கள் என்றால், அவர்களுடைய மூளையை அப்படியே அரித்துவிடும். அந்தப் புஸ்தகங்கள், 60 வயது 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் படிப்பதற்கு லாயக்கான புஸ்தகங்கள். ஆனால் அதைத்தான் நமது காலேஜுகளில் பாடமாக வைத்திருக்கிறார்கள். தமிழில் ரொம்பக் கொஞ்சம்தான் படிக்கவேண்டியது. ஆனால் இதை யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் இப்பொழுது Independent Govt. தமிழைப் பற்றியே அதே பயித்தியமாக பேசிக் கொண்டிருப்பவர்களிடத்தில், இவ்வளவு தான் படிக்க வேணுமென்றால் அதை ஒருவரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நான் அதேமாதிரி சிலதைத்தான் படிக்க வேணுமென்று, என்னுடன் சேர்ந்தவர்களை அந்த மாதிரி படிக்க வைத்து, அதே மாதிரி நடைமுறையிலும் வைத்திருக்கிறேன். அது தான் வித்தியாசம். தமிழ் படிக்கிறார்கள், படித்து அந்தமாதிரி யாராவது நடக்கிறார்களா என்றால் நடக்கிறதைக் காணோம். நம்ம கவர்ன்மெண்ட் எப்படி லெக்சர்ஸ் கொடுக்கிறார்களோ அந்த லெக்சர்படி நடக்கிறதொன்றும் கிடையாது. அதே மாதிரிதான் இப்பொழுது தமிழிலும் இருக்கிறது. பள்ளிக்கூடத்திற்குப் போய் படிக்கா விட்டாலும் கூட, தமிழில் சில புத்தகங்களிலிருக்கிறபடி, நடந்தால் போதும், எல்லோரும் நல்ல செல்வவான்களாக இருக்கலாம், நல்ல அறிவாளியாகவும் இருக்கலாம், ரொம்பவும் ஒழுங்காகவும் நடக்கலாம். அந்தமாதிரி நடப்பதற்கு இந்தக் காலத்தில் சந்தர்ப்பமேயில்லை. ஸ்கூல்பைனல்வரைக்கும், நமது இளைஞர்கள் கெட்டுப் போகாமல் இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது இருக்கிற ஸ்கூல் பைனலும் கூட, கெடுகிறமாதிரி

தெரிகிறது. இதற்காகவே நான் தற்சமயம் ஒரு விளம்பரம் போட்டிருந்தேன். விடுதலை, தினத்தந்தி இவைகளிலெல்லாம் போட்டிருந்தது. இந்த மார்ச்சு மாதம் ஸ்கூல் பைனலில் தேர்வு பெருதவர்களுக்கு ஒரு வாய்ப்பு என்று ஒரு விளம்பரம் கொடுத்தேன். அதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்கலா மென்று. அது என் அந்தமாதிரி இந்த மார்ச்சில் தேர்வு பெருதவர்களென்று போட்டேன் என்ருல், போன வருஷம் மார்ச்சு மாதத்தில் தேர்வுபெருத வர்களாயிருந்தால், இது வரைக்கும் கண்டபடி சுற்றிக் கெட்டுப் போயிருப்பான் என்று சொல்லி இந்த மார்ச்சு மாதத்தில் தேர்வு பெருதவர்களுக்கு மட்டிலும் என்று போட்டேன். இப்பொழுது அந்த ரேட்டுக்கு வந்திருக்கிறது. இதற்கு முன்பு அதாவது 15 வருஷத்திற்கு முன்பு B. A. படித்திருந் தால் அவர்கள்தான் வேணுமென்று வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன, அப்புறம் B. Sc., B. E. படித்தவர்கள்தான் நல்லது என்று எடுக்கப் பட்டது. அப்புறம் P. U. C. தான் தேவலை B. A. படித்தபோது கெட்டுப் போகிருன் P. U. C. தான் தேவலாமென்று சொல்லி அதை எடுத்தோம். இப் பொழுது P. U. C. யும் போய் விட்டது ஸ்கூல் பைனல் பாசானவன்தான் சரி என்று எடுத்தோம் அதுவும் கெட்டுப் போய்விட்டது. இப்பொழுது ஸ்கூல் பைனல் தேருதவன்தான் ஒருநிலையில் இருக் கிருன் என்று அர்த்தமாகிறது. அதாவது கல்வி யினுடைய வளர்ச்சி இந்த ரேட்டில் இருக்கிறது. இப்பொழுது கவர்ன்மெண்டில் எல்லோரையும் படிக்க வைத்தே தீரவேணும், எல்லோரையும் ஸ்கூல் பைனல் வரை படிக்கவைத்தே தீரவேணுமென்று பேப்பரில் போட்டிருந்ததைப் பார்த்தேன். அவ் வளவு பேர்களேயும் இப்பொழுது இருக்கிறதைவிட

அந்த ஒழுங்குகளெல்லாம் கெடுத்து முட்டாள்கள் ஆக்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். இதற்கு அந்த கவர்ன்மெண்டுக்கு ரோஷமிருந்தால் என்னிடம் வரட்டும், நீ ஏன் இப்படிச் சொன்னாய் அதை நிரூபனம் செய் என்று கேட்டால் சொல்கின்றேன். (கரகோஷம்.) அல்லது நான் இப்படிச் சொன்னதைக் கொண்டு கவர்ன்மெண்டை தாக்கினாய், அதனால் உன்னை பிராசிக்யூஷன் பண்ணுவோம் என்று கோர்ட்டுக்குக் கொண்டுபோய் விட்டால் அங்கே சொல்லுகிறேன். (கரகோஷம்). இந்த இரண்டும் செய்யவில்லையென்றால் அந்த கவர்ன்மெண்டை என்னவென்று சொல்லுவது. (கரகோஷம்) ரோஷமில்லாத கவர்ன்மெண்டு என்றுதான் சொல்ல வேணும் (பலத்த கரகோஷம்). இப்பொழுது எனக்கென்ன எப்படியோ போகிறார்கள், எப்படியோ துலைந்து போனாலென்ன என்று நான் இருக்கலாம். அதற்கு இந்தமாதிரியெல்லாம் பேச வேண்டியதில்லை, சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நமது இளைஞர்களை இவ்வளவு மோசமாக பண்ணுகிறார்களே என்கிற வருத்தத்தினால், ஆனது ஆகட்டும் என்று சொல்கிறேன். நல்ல பையன்கள், ஒவ்வொருத்தனும் நல்ல ஒழுங்கான பையன்கள். பிறந்த போதே இந்தக் கேடுகளை எல்லாம் கற்றுக் கொண்டு வரவில்லையே எப்பேர்ப்பட்ட பையன் பிறந்தாலும் அவனை எந்த வழிக்கு வேணுமென்றாலும் திருப்பலாம். திருப்பிக் காட்டி யிருக்கிறேன். திருப்பி இருக்கிறேன். அதை யார் வேணுமென்றாலும் வந்து பார்க்கலாம். இப்பொழுது ஒரு பையன் (இந்த கண்காட்சியிலும் கூட பார்க்கலாம் அந்த மெஷினைப் பார்க்கலாம்) இந்த இரண்டு மாதத்திற்கு முன் எலக்ஷனில், ஒரு கக்ஷியைப் பார்த்தே அதே மாதிரி இனி யொருகக்ஷியும் காப்பி அடிக்கிறது.

ஸ்கூல்பைனல் தேருத பையன்களை யெல்லாம் கூட்டி இரண்டு மாதத்திற்குச் சம்பளம் கொடுத்து "கம்யூனிஸ்டுக்கு ஓட்டுப் போடு, தி. மு. க. வுக்கு ஓட்டுப் போடு, காங்கிரசுக்கு ஓட்டுப் போடு" என்று ஓரே உயரமுள்ள பையன்களாக எடுத்து, ஓரே மாதிரி உடையைக் கொடுத்து சப்தம் போட வைத்தார்கள். அதை யெல்லாம் பார்த்துக் கொண் டிருந்தேன். இப்பொழுது அது தீர்ந்ததும் பத்துப் பதினைந்து பேர், வேலை வேணுமென்று விண்ணப்பம் செய்தார்கள். ஒரு பாரம் வைத்திருக்கிறேன் அந்த பாரத்தில் எழுதிக் கொடுக்கச் சொன்னேன். அதில் "இது வரைக்கும் அரசியல் விஷயங்களில் இருந்தி ருக்கிருயா? அதில் எத்தனை நாள் இருந்திருக் கிருய்? என்ன வேலை செய்திருக்கிருய்?" என்று இரண்டு மூன்று கேள்வி இருக்கிறது. அதில் இவன் ஸ்கூல் பைனல் தேருதவன், அரசியல் என்கிற கேள்வியிலே, "அதில் இரண்டு மாதம் வேலை செய் திருக்கிறேன் கம்யூனிஸ்டு கட்சியில் இருந்திருக்கி றேன், முன்பு தி. மு. க. விலே இருந்திருக்கிறே னென்று" எழுதிக் கொடுத்திருக்கிருன். அப்படியா ஞல் ஸ்கூல் பைனல் தேருத போஞல் அவனுக்கு வேறு கதி கிடையாது இந்த மாதிரி ஏதோ தற்கா லிக வேலைக்குப் போக வேண்டியது. அதோடு அவன் திருட்டோ, பிரட்டோ, உருட்டோ ஏதோ ஒன்று ஆரம்பிக்க வேண்டியதுதான் என்று படுகிறது. அதற்கப்புறம் அதிலிருந்து 7 பையன் களை சம்பளத்திற்கு வைத்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுக்கிறது என்று ஒவ் வொரு வேலையைக் கொடுத்தேன். ஒருத்தனுக்கு கம்பி வாங்கி வேலிவலை செய்தல், இன்னெருத்த னுக்கு பிளாஸ்டிக் சாமான்கள் செய்கிற வேலை, மற் ருெருவனுக்கு டூல் ரூமில் ஒரு வேலை இந்த மாதிரி

ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வேலே கொடுத்தேன். கம்பி பிளாக் மார்க்கெட்டில்தான் வாங்கவேண்டும். அவன் பிளாக் மார்க்கெட்டில் வாங்கி Fencing செய்து (ஒரு வாரத்திற்கப்புறம் நீ என்னமோ செய்டா உன் சம்பளம் சம்பாதிக்க முடியுமானுல் நீ சம்பாதி என்று விட்டு விட்டேன்.) ரூ. 150 ஒரு மாதத்திற்கு சம்பாதிக்கிருன். பிளாஸ்டிக்கில் வேலே செய்கிறவன் ரூ. 120 சம்பாதிக்கிருன். இன்னெருத்தனுக்கு இந்த மாதிரி தனி வேலே கொடுக்கவில்லே. ரூபாய் 150 சம்பாதிப்பவனுக்குக் கீழே போட்டிருக்கிறது. அவனுக்கு மேலே வேலே செய்து கொண்டிருக்கிருன், அவனுக்கு ரூ. 100 கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த மாதிரி ஸ்கூல் பைனலால் கெட்டுப்போகிருனே தவிர, பையன் மோசம் இல்லே. மார்க்கு வாங்குவதில் தவறிப் போய் விட்டானே ஒழிய, பையன் கெட்டிக்காரன் தான். அப்பேர்ப்பட்ட கெட்டிக்காரப் பையன்களே வேலேயில்லாமல் விட்டுவிட்டோமானுல், அவன் எதில் கெட்டிக் காரனுகிருன், திருட்டிலும் வேறு இனியாரையாவது ஏமாற்றுவதிலும், வேறு ஏதோ ஒன்றில் கெட்டிக்காரனுகலாம். அந்த மாதிரி பழக்கப்படாது நமது கவர்ன்மெண்டிலே. இதற்கு என்ன செய்யலாமென்று தெரிய வேணுமென்றிருந்தால், வந்து கேட்கட்டும், நான் சொல்லுகிறேன். இதுவரைக்கும் நானும் கொண்டுபோய் ஒவ்வொன்றையும் சொல்லிக் கொடுத்துக் காட்டி யிருக்கிறேன்.

22 வருஷங்களுக்கு முன் அமெரிக்காவிலிருந்த பொழுது 20க்கும் அதிகமான பள்ளிகளுக்குப் போய், எப்படி இளேஞர்களுக்குக் கற்பிக்கிருர்கள் என்பதையும் பார்த்துவிட்டு, பலவிதமான விவசாயப் பண்ணேகளேயும் பார்த்துவிட்டு, இங்கு வந்து,

விவசாயத்தில் எங்குமில்லாத ஒரு முறை, நமக்கு ஊசி போடுவது போல சில செடிகளுக்கும் ஊசி போட்டு அதில் நல்ல பலன் கிடைத்தது. இதில் பருத்தி, பப்பாளி, துவரை முதலியன நன்ருக லாபகரம் வந்தது. அவற்றில் நல்ல பலன்கள் கொடுக்கக் கூடியதான விதைகளெல்லாம் இருக் கிறது. இரண்டு வருஷமாக வந்தவர்களுக்கெல்லாம் அந்த விதையைக் கொடுத்தேன். ஒருத்தராவது அதைக் கொண்டு போய்ப் போட்டு ஏதாவது வேலை செய்தவர்களல்ல. ஏதோ வயதானவர் கொடுக்கிருரே என்று மரியாதைக்கு வாங்கிக்கொண்டு போய் எறிந்துவிடுகிருர்கள். அப்புறம் 10 ரூபாய் ஒரு கொட்டை விலை என்று விளம்பரம் போட்டேன். அப்புறம் வருகிருர்கள். 100 மைல் 200 மைலி லிருந்து முதல் வகுப்பு வண்டியில் அதைப் பார்க்கிற தற்கும், வாங்குவதற்கும் டிக்கெட் வாங்கிக்கொண்டு வருகிருர்கள், வந்தபோது "இனியும் ஒரு வாரம் ஆகும் விதை உலருவதற்கு, போய்விட்டு வாருங்கள்" என்று சொன்னேன். பிறகு போய்விட்டு வந்து, அவ்வளவு பேரும் வரவில்லை, கொஞ்சம் பேர் வந்து 10 ரூபாய் போட்டு ஒவ்வொரு விதையைக் கொண்டு போய், பிறகு "நான் விதை போட்டேன் ஒரு முழம் வந்திருக்கிறது, இரண்டு முழம் வந்திருக்கிறது" என்று கடிதம் எழுதுகிருர்கள். முன்பு இரண்டரை வருடம் சும்மா கொடுத்தபோது, என் என்று கேள்வி கேட்பாரில்லை. அதேமாதிரி ஒருவருக்கு ஒரு ஆயுர் வேத மருந்து கொடுத்தேன். மருந்தை வாங்கிப் போய் ஒரு நாளைக்கு சாப்பிட்டுவிட்டு, பிறகு சும்மா வைத்து விட்டு வியாதி குணமாகவில்லையென்று சொல்லிக்கொண்டிருந்தார். நல்ல ஒரு இங்கிலிஷ் பாட்டிலில் நல்ல ஆட்டுப் புழுக்கையை ஒரு அறுபது எடுத்துப் போட்டு, ஒரு நாளைக்கு 3 புழுக்கை

சாப்பிடு என்று சொல்லிக் கொடுத்தேன். (பலத்த சிரிப்பு, கரகோஷம்) அதில் நன்ருக குணமாகி விட்டது என்று சொன்ஞன் (பலத்த சிரிப்பு, கரகோஷம்). நமது விஷயம் அந்தமாதிரி இருக்கிறது (சிரிப்பு). அதனுல் என்ன செய்யலாம், வேண்டுமென்ருல் யாராவது வந்து கேட்டால் சொல்லுகிறேன். சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். கேட்டுக்கொண்டும் இருக்கிருர்கள். இப்பொழுதும் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். சொன்ஞலும் அவ்வளவு பேரும் போய் அதைச் செய்வதுமில்லே. அரசாங்கம் செய்தால், எல்லா இடத்திலும் செய்யலாம். இப்பொழுது கல்விக்காக எவ்வளவு செலவிடுகிருர்களோ, அதில் கால் பங்கு செலவில், இப்பொழுது கல்வியில் என்ன அறிவு வருகிறதோ, அறிவு வருகிறது என்ருல், 100 பாகம் கெட்ட அறிவும், 100 பாகம் நல்ல அறிவும் வருகிறது என்று வைத்துக்கொண்டால், அந்த 100 பாகம் கெட்ட அறிவையும் போக்கி, 100 பாகம் நல்ல அறிவுக்குப் பதில், 500 பாகம் நல்ல அறிவு, அந்த கால் பாகம் செலவில் வரும்படியாகச் செய்யலாம். அது எப்படி என்று வந்து கேட்டால், சொல்லலாம் என்று இருக்கிறேன். இதுவரைக்கும் காண்பித்துக் கொடுத்தேன், செய்து கொடுத்தேன், சாமான்களும் கொடுத்திருக்கிறேன். என்ன கொடுத்தும் ஒன்றும் நடக்கவில்லே.

இப்பொழுது இங்கே என்ன சொல்லுகிறேன் என்ருல், இந்தக் கட்டிடம் கட்டுவதற்கு 80 ஆயிரம் செலவு செய்திருக்கிருர்கள், இது ரொம்பக் கொஞ்சம். டில்லியில் எக்ஸிபிஷன் காட்டுவதற்கு நமது கவர்ன்மெண்ட் 7 லக்ஷம் ரூபாய் செலவு செய்தார்கள். இதுமாதிரி எக்ஸிபிஷன் மேல் நாடுகளிலும் இருக்

கிறது. நான் படித்ததெல்லாம் அந்த மாதிரியான எக்ஸிபிஷன்களில் போய் சுற்றிப் பார்த்து, அவைகளில் என்ன இருக்கின்றன என்று அறிந்து, அதில் சிறிது அறிவு வந்ததே தவிர, பள்ளிக்கூடத்தில் படித்தோ அல்லது பாக்டரிகளில் வேலை செய்தோகூட வரவில்லை. இந்த எக்ஸிபிஷன்களில்தான் நல்ல அறிவு வந்திருக்கிறது. எனக்கு முன்பு ஏதாவது அறிவு இருந்திருந்தால் அது மிகக் கொஞ்சம்தான். முன்பு வெளிநாடுகளுக்குப் போவதற்கு முன்னால், ஏதோ பஸ்ஸை ஓட்டி வழியில் எங்கும் நிற்காதபடி கொண்டுபோய்விட்டால் அதே பெரிய வேலை என்று எனக்கும் தலை வீங்கின காலம் இருந்தது. இப்பொழுது அதேமாதிரி காலேஜில் போய் ஒரு டிகிரி வாங்கிவிட்டால் எல்லோருக்கும் தலை வீங்கிப் போகிறது. அதேமாதிரி எனக்கும் தலை வீங்கின காலம் இருந்தது. மேல்நாடுகளில் போய் பார்த்தால் ஒரு சின்ன பையனுக்கு நாம் ஈடு ஆகாது. அங்கு ஒரு பிலிம்கூட எடுத்திருக்கிறேன். 1940-ல் அமெரிக்காவில் தமிழில் ஒரு பிலிம் எடுத்திருக்கிறேன். அந்த பிலிமில் முதலிலெடுத்ததும் சொல்லுகிறேன், "Bring the world to class room" என்கிற பிலிமில் முதலில் சொல்லுகிறேன். "நம் கண்ணுக்கு முன்னால் நிகழும் செய்திகள், உலகத்தில் நடக்கும், நடப்பவற்றைப் பார்க்கும்பொழுது, ஒரு அணுவிலும் அணுவளவாகும்" என்று முதலில் எடுத்துச் சொல்லுகிறேன். அதற்கே தனி பிலிம் இருக்கிறது. அந்த பிலிம் இன்னும் கெடாமல் இருக்கிறதோ இல்லையோ தெரியாது. அதைப் பார்த்தால் தெரியும் அந்தக் கருத்தில் என்ன இருக்கிறது என்றால், நமக்குத் தெரிந்தது ஒரு அணுவிலும் அணுதான். ஒருவனுக்கு எவ்வளவு தெரிந்திருந்தாலும், சர் சி. வி. ராமன் உலகத்திலேயே இல்லாத

அற்புதங்களையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார். அவரை எடுத்துக்கொண்டாலும்கூட, அவருக்குத் தெரிந்ததும் ஒரு அணுவிலும் அணுதான் என்று சொல்லலாம். அவ்வளவு சமாச்சாரம் உலகத்தில் இருக்கிறது. அதில் தெரிந்தது மிகக் குறைவுதான் என்று அங்கே போய்ப் பார்த்தபிறகுதான் நமக்கு அந்த கர்வம் என்பதெல்லாம் அடங்கிற்று.

ஒவ்வொரு ஊரிலும் உள்ள எக்ஸிபிஷன்களைப் பார்த்த பிறகு, ஒருவன் கல்வி கற்பதற்கு ஏற்ற இடம், எக்ஸிபிஷன்தான் என்று பார்த்தேன். எப்படி என்றால், ஒரு எக்ஸிபிஷனில் லேத் மிஷினை எடுத்துக்கொண்டால், அந்த ஊரில் 20 கம்பெனிகள் லேத் செய்தால், அந்த 20 கம்பெனியாரும் தங்களது லேத்துகளை அந்த எக்ஸிபிஷனில் கொண்டுவந்து காண்பிக்கிறார்கள். இது என்னுடையது. இது இவ்வளவு நல்லது, இன்னின்ன பாயிண்டில் நல்லது என்று ஒருவன் காட்டுகிறான். இன்னொருவன், என்னுடையது இவ்வளவு பாயிண்ட்ஸ் இருக்கிறது, இவ்வளவு நல்லது இருக்கிறது என்று காட்டுகிறான். அங்கே அவ்வளவு லேத்துகளையும் பார்க்கலாம். அதேமாதிரி, ஒருவன் சமையல் செய்கிற பாத்திரம் கொண்டுவந்தானானால், அதை எவ்வளவு பேர் செய்கிறார்களோ, அவ்வளவும் அங்கே வருகிறது. ஒவ்வொருவனுடையதும் இன்னின்ன காரணத்தினாலே இன்னின்னது நல்லது என்று சொல்லுகிறான். அங்கு தெரிந்துகொள்ளக் கூடிய அளவு நீங்கள் எங்கேயும் பார்க்கவும் முடியாது, செய்யவும் முடியாது, கற்றுக்கொள்ளவும் முடியாது. ஒரு காலேஜுக்குப் போனால், ஒரு மெஷினை வைத்து சும்மா காட்டிவிட்டுப் போகிறானே தவிர, இப்பொழுது இருக்கிற காலேஜுகளில் எந்தக்

காலேஜுக்குப் போனாலும், ஒரு மெஷினை வைத்துக் காட்டிவிட்டு அதற்கு லெக்சர் கொடுக்கிறானே தவிர, அதில் வேலைசெய்ய விடுவதில்லை. அந்த மாதிரி வேலைசெய்ய வசதியுள்ள காலேஜுகள் இப்பொழுது இங்கு இல்லை. அல்லது வேறு exhibition-க்கு போனால் வளையல் வாங்கலாம், சேலை வாங்கலாம், இன்னும் ஏதாவது லிப்ஸ்டிக் வாங்கலாம். அதிலே பூடுசுகளும் வாங்கலாம், இவற்றை வாங்குகிற மாதிரி இருக்கிறதேயொழிய, இந்த exhibition களெல்லாம் ஏதாவது போய் பார்த்து இளைஞர்களுக்கு அறிவு வரக்கூடியதாக சில இருக்கலாம். ஆனால் இவ்வளவு அதிகம் கெட்ட சாமான்கள் இருக்கிற இடத்திலே, அந்தக் கொஞ்சம் இருந்ததென்றால், இவன் அதை மாத்திரம் பார்ப்பானா? சினிமாவைத்தான் முதலில் பார்ப்பான். இன்னும் ஏதாவது டிராமா இருந்தால் அதைப் பார்ப்பான். அதுகளெல்லாம் இந்த இளைஞர்களுக்கு ஆகாது. ஆகாததுதான் இங்கு நிறைய போட்டிருக்கிறீர்கள். அதைத்தான் பெரிய அட்வர்டைஸ்மெண்டாக போட்டிருக்கிறீர்கள். (பலத்த சிரிப்பு). அதில் போட்டிருக்கிறது பூராவும் இளைஞர்களுக்கு ஆகாததையே போட்டிருக்கிறது. அதில் உள்ளே போனால் இதைத்தான் பார்க்கத் தோன்றும். இது கூடாது என்று சொல்லப்போனால் உங்களுக்கு எரிச்சலாகத்தான் இருக்கும் (சிரிப்பு.) 80 ஆயிரம் ரூபாய் சிலவு செய்துவிட்டு, அந்த ரூபாய் வரவுக்கு ஏதாவது பார்க்கவேண்டுமென்றால், இந்த மாதிரி போட்டால்தான் வருகிறது. அதை இங்கு சொல்லி என்ன செய்வது.

எக்ஸிபிஷன் நடத்த வேண்டுமென்றால், இவ்வளவு ரூபாய் போட்டு சிலவு செய்து இந்தக் கட்டிடங்களையெல்லாம் உடனே பிரித்துவிடுகிறார்

கள். அதற்குப் பதில், 5 அல்லது 10 வருடத் திற்குப் போடுகிற சிலவு பணத்தை எடுத்து நிரந்தர மான கட்டிடமாகப் போட்டு, அதில் வைக்கிற எக்ஸிபிஷன் சாமான்களும் நிரந்தரமாக இருக்கச் செய்யவேண்டும். நியூயார்க்கில் ராக்பெல்லர் பில்டிங்கில் ஒரு எக்ஸிபிஷன் ஒரு சிறிய பாகம் வைத்திருந்தார்கள். அதாவது ஒரு என்ஜின், ஒரு கலப்பை. அது உழுவது எப்படி, அதற்குத் தக்க இடத்தில் சிறிது மண்ணைப்போட்டு, ஒரு பித்தானை அழுத்தினால் அந்தக் கலப்பை உழுகிறது. ஒரு சிறிய பையன்போய் அழுத்தி அதைப் பார்த்துத் தானே தெரிந்துகொள்ளலாம். இன்னொருவன் போய் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. மற்றோர் இடத்தில் போய் தண்ணீர் தானே எவ்வாறு தளைக் கிறது என்று ஒரு பித்தானை அழுத்தினால், தண்ணீர் தளைகிறது, தளைத்து ஆவி அதிகமாகி அந்த நீராவி இன்னொன்றைத் தள்ளுகிறது. அந்த மாதிரி போட்டிருக்கிறார்கள், தானே போய் விளையாடப் போகிறபோது அவன் தானாகவே கற்றுக்கொள் கிறான். இங்கே இன்ஜினியரிங் காலேஜில் இரண்டா வது வருஷம் அல்லது மூன்றாவது வருஷம்தான் இந்த சப்ஜெக்ட் வருகிறது. அந்த சப்ஜெக்ட் ஒரு பெரிய சப்ஜெக்ட் என்று வைத்து, அதற்கு ஒரு வருஷம், ஒன்றரை வருஷம் லெக்சர்கள் கொடுக்கிறார்கள். அங்கு கற்றதை அவன் ஆயுளில் உபயோகிப்பதே இல்லை. அவன் அங்கே படித்துவிட்டுப்போய் எங்கேயோ டைப் அடிக்கப் போய்விடுகிறான் அல்லது பத்து முட்டாள் பையன்களை வேலை வாங்குவதற்கு அங்கே கணக்கு எழுதப் போய்விடுகிறான். ஒரு ஓவர்சீயராகவோ அல்லது வேறு ஏதோ வேலைக்குப் போய்விடுகிறான். அவன் எதைப் படித்தானோ அந்த வேலை கிடைப்பதில்லை அல்லது கொடுப்பதில்லை.

அப்படியே வேலை இருந்தாலும் எவனாவது ஒரு சிபாரிசு உள்ளவனைத்தான் தூக்கிவிடுகிறார்கள். அதிலும் பிராமணன் கூடாது, முதலியார் கூடாது, அது கூடாது, இது கூடாது, ஷெட்யூல்ட் காஸ்டுக்குத்தான் எல்லாம் கொடுக்கப்படவேண்டும் என்கிறார்கள். அதுவேறு ஒரு மூலையிலே. எவனுக்கு அறிவு இருக்கிறதோ, அந்த அறிவை உபயோகப்படுத்துகிறதில்லை. எவனுக்கு உடல் பலம் இருக்கிறதோ, அந்த பலத்தை உபயோகப்படுத்துவதில்லை. எவனுக்கு வழி இருக்கிறதோ அந்த வழியை உபயோகப் படுத்துவதில்லை. இந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது.

நான் இனிமேல் இந்த மாதிரி பேசுகிறதுமில்லை இந்த மாதிரி விசேஷங்களுக்குப் போகிறதுமில்லை என்று வைத்திருக்கிறேன். அதனால் கடைசியாக ஒரேயடியாக இங்கே சொல்லிவிட்டேன் (கைதட்டல்). இப்பொழுது இங்கே செய்யவேண்டியது, அந்த மாதிரி எக்ஸிபிஷன் இங்கே வையுங்கள். அந்த மாதிரி எக்ஸிபிஷன் வைத்தால் அதை அழிக்கக் கூடாது. வருஷத்திற்கு ஒரு முறை மாரியம்மன் திருவிழா, அது இது இருந்தால், அந்த சமயத்தில் வேறு ஏதாவது கூட சேர்க்கலாமே தவிர, எக்ஸிபிஷன் என்று வைத்து, நிரந்தர மியூசியமாக வைக்க வேண்டும். பர்மனெண்டாக ஒவ்வொருவராக வந்து பார்க்கக்கூடியதாக வைத்து, அதை சிறு பையன்கள் வாரத்திற்கு ஒரு நாள் லீவு நாட்களில் வந்து, விளையாடுவதற்கு வந்து, விளையாடுவதற்கு வரும் பொழுது இந்த அறிவெல்லாம் கற்றுக்கொள்வார்கள்.

ஜப்பானில் என்ன செய்கிறார்கள் என்றால், ஒரு ஆடை (dress) யில் கெமிக்கல் பிக்சர்ஸ் (chemical

pictures) அதாவது ஹைட்ரோக்ளோரிக் ஆசிட்டும் ஒரு உலோகமும் சேர்த்தால் என்ன ஆகும்? அந்த உலோகத்தைப் போட்டு, ஹைட்ரோக்ளோரிக் ஆசிட்டையும் போட்டு, அது புகைபோய் கடைசியில் பள பள என்று ஆகிறது. அதெல்லாம் படங்கள் (pictures). மற்றொரு உடையில் ஜப்பான் படமே போட்டிருக்கிறான். அந்தப் படத்தில் டோக்கியோ, ஒசாகா, நாகசாகி என்று போட்டிருக்கிறான். நான் இந்த இடத்தில் இருக்கிறேன் என்று முற்றுப் புள்ளி வைத்து, அந்த வேஷ்டி பூறுவும் பூகோள சாஸ்திரம் (geography) அந்த ஒரு படம் இருக் கிறது. அதற்கடுத்த படம் சைனு, அதற்கடுத்த படம் இந்தியா, அதற்கடுத்த படம் ஆசியா முழு வதும், அதற்கடுத்த படம் ஐரோப்பா. இப்படி கொண்டுவந்து ஒரு சிலையைக் கட்டுகிறபோதே அவள் பூரா பூகோள சாஸ்திரமும் சொல்லிக் கொடுக்காமலே தெரிந்துகொள்ளுகிறுள்.

மற்றொன்றில் ஒரு மோட்டார் என்ஜின். இந்த மாதிரி ஒவ்வொன்றிலும், ஆடையிலேயே வைத்து ஒரு கஷ்டமும் இல்லாதபடிக்கு ஒரு சிலவும் இல்லாத படிக்கு குழந்தைகளுக்கு அந்த மாதிரி அறிவைக் கொண்டுவருகிறுர்கள்.

நமது ஊரிலே சர் ஷண்முகம் செட்டியாரின் 60-ம் ஆண்டு விழாவிற்கு ரொம்பப் பேர் ஏதேதோ பரிசு கொண்டுவந்து கொடுத்தார்கள். நானும் ஒரு பரிசு கொடுத்தேன். என்ன பரிசென்றுல், அங்கே இன்ஜினீயரிங் காலேஜ் மாணவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் புஷ்கோட் அணிந்துகொண்டு வந்திருந்தார் கள். அதில் என்ன இருந்ததென்றுல், சினிமா நக்ஷத்திரங்கள் — பெண்களுடைய — படம் போட்டு,

அதை அணிந்துகொண்டிருந்தார்கள். நான் அதில் ஆறு கெஜம் வாங்கி சேலையாகக் கட்டிக்கொண்டு, அவருக்கு ஒரு ஆறு கெஜம் மடித்துவைத்து கொண்டு போய் பிரசண்ட் கொடுத்தேன் (கரகோஷம்). அந்த மாதிரி நடக்கிறது நமது ஊரில்.

ஒரு பிலிமுக்குப் போய்ப் பார்த்தோமானால், பிலிமெல்லாம் 50, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பார்க்கக்கூடியவைகள் நிறைய இருக்கிறது. அவர்களுக்காக அந்த பிலிம்கள் இங்கே இருக்க வேண்டியது, பார்க்கவும் வேண்டியது. அதற்காக வேண்டுமானால் சினிமா இருக்கவேண்டியது. ஆனால் இங்கே யார் இருக்கிறார்கள் என்றால், 4 மணி முதல் 6 மணி வரை அங்கேயே க்யூவில் நின்று, டிக்கட் வாங்கக்கூடிய பலமுள்ள இளம் பையன்கள்தான் இருக்கிறார்கள். அந்த மாதிரி நடந்துகொண்டிருக்கிறது. நீங்கள் அவைகளுக்கெல்லாம் இடங் கொடாமல், நிரந்தரமான மியூசியம் ஏற்படுத்துங்கள். அதில் சயன்ஸ் மியூசியம்தான் இருக்கவேண்டும். "மியூசியம்" என்று சமீபத்தில் ஒரு கட்டுரை வந்திருந்தது. அந்த மியூசியத்தில் தலைபோன, கால் போன விக்ரகம், எங்கோ தோண்டி எடுத்த விக்ரகம், அவைகளை போட்டோ எடுத்த படங்கள், அந்த போட்டோக்கள் ஆர்ட்ஸ் என்கிற பெயரில், "Ancient Arts" என்கிற பெயரிலே; எவனோ ஒருவன் ஒரு எண்ணெயிலே எழுதிவைத்தானும் எந்தக் காலத்திலேயோ. அது அந்தக் காலத்திற்கு ஆர்ட்ஸ்தான். அந்தக் காலத்திலே ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகவே முடியாது. அந்த ஊரில் இந்தமாதிரி ஒரு ஓணவாயன் இருந்தான் என்று ஒருவன் எழுதிக்கொண்டுவந்து காட்டினால், "ஓ, இப்படியும் இருக்கிறார்களா?" என்று நினைப்

பதற்கு அந்தக் காலத்தில் ஆர்ட்ஸ்தான் சரி. இந்தக் காலத்தில் ஆர்ட்ஸ், ஆர்ட்ஸ் என்று, அதை பெரிய ஆர்ட்ஸ் என்றே கொண்டுவந்து, அதை ஒரு பெரிய தொழிலாகக் கொண்டுவந்து இதை மியூசியம் என்று வைக்கிறார்கள். படங்கள், பழைய காலத்து இரும்புகள் அல்லது பழைய காலத்துத் தலைகள் முதலியவைகளைக் கொண்டுவந்து வைக்கிறார்கள். இனி அவைகளுக்கெல்லாம் இடம் இல்லாதபடிக்கு, இப்பொழுது நமக்கு என்ன வேண்டும்? நமது பையன்கள் என்ன செய்யவேண்டும்? என்ன தொழில் கற்றுக்கொள்ளவேண்டும்? அதற்கு என்ன வேண்டுமோ, அதைக் கொண்டுவந்து வையுங்கள். அதைக் கொண்டுவந்து காட்டுங்கள். அதைப் பள்ளிக்கூடங்களிலேயே – இதுவரைக்கும் 15, 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் இதெல்லாம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று இருந்தது – இப்பொழுது 10 வயதிலிருந்தே இந்த எண்ணங்களெல்லாம் வரும்படியாகச் செய்தாலொழிய, 15, 20 வயதிற்குப் போகும்போது, அவர்களுக்கு வேறே எண்ணம் வந்துவிடுகிறது. அந்த வயது சரியான வயதல்ல. பத்து வயதிலிருந்தே இந்த மாதிரி எண்ணங்கள் எல்லாம் வரும்படி ஆரம்பிக்கவேண்டும். அதற்குத் தக்கபடி பள்ளிகள் ஆரம்பிக்கவேண்டும். இந்த மியூசியங்களும், அதிலும் சைன்ஸ் actual demonstrating museum ஆக வைத்து, அதை அழிக்கக்கூடாது. இந்த மாதிரி வருஷத்திற்கு ஒரு முறை வைத்து, அதைப் பிரித்து விடக்கூடாது. இப்பொழுது இதோ இருக்கிறது, இன்னும் ஒரு ஆயிரம் இரண்டாயிரம் போட்டு ஒரு ஹால் நல்ல ஸிங்க் (zinc sheet) ஷீட் போட்டு நிரந்தரமாகக் கட்டியிருக்கலாம். எதற்காக இம்மாதிரி தட்டி போட்டு வேலை நடக்கிறது? – [கட்டுவதற்கு

வேலை நடக்கிறது, அதற்கும் ஆஸ்பத்திரிக்கும்தான் இந்த பண்டு. இந்த பண்டை (fund) வைத்துத்தான் கட்டப்போகிறோம். கலெக்டர் பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார், மேற்கொண்டு ரூபாய் வசூல் செய்து, அடுத்த வருஷம் நீங்கள் வரமுடியாது என்று சொல்லுகிறீர்களா? வரும்படியாக வைப்போம் (கரகோஷம்). வரும்படியாகப் பண்ணி, அந்தக் கட்டிடத்தை உங்கள் கையாலேயே திறப்போம்.] — அந்த மாதிரி செய்தால் தாராளமாக வருவேன். (பலத்த கரகோஷம்).

இப்பொழுது இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்தத் தமிழ் நாட்டிலே திருநெல்வேலி ஒன்றுதான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். நோய், நொடி ஒன்றும் அதிகம் இல்லாமல் இருக்கிறது என்று நினைக்கிறேன். (சிரிப்பு.) என்ன காரணம் என்றால் மற்ற இடங்களில் எல்லாம், கோயமுத்தூர், அல்லது சேலம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் எல்லாம் இண்டஸ்டிரீஸ் ரொம்ப ஜாஸ்தியாகி விட்டது. அந்த இண்டஸ்டிரீஸ் அதிகமாகி என்ன ஆகிவிட்டது என்றால், ஆரம்பிக்கும்போது ஒரு பத்தாயிரம் போடுகிறான், அல்லது ஒரு லக்ஷம் போடுகிறான். ஆறு மாதம் ஒரு வருஷம் லேசன்சே வரவில்லை. வட்டிக்காரன் வந்து வட்டி கேட்டுக்கொண்டிருக்கிறான். கோர்ட்டில் போடுகிறேன் என்று அதட்டுகிறான். இண்டஸ்டிரீஸ் ஸ்டார்ட் பண்ணுவதற்கு முன்பே இன்கம்டாக்ஸ் காரன் வந்து பிடிக்கிறான். அதிலேயே அவனுக்கு ஷாக் (shock) வந்து ஹிருதய நோய் (heart disease) வந்து விடுகிறது. ஹார்ட் டிசீஸ் இல்லாது போனால் டயாபடீஸ் ஆவது வந்து விடுகிறது அல்லது ஆஸ்த்துமாவாவது வருகிறது

(சிரிப்பு.) அல்லது ஏதாவது ஒன்று, வியாதி வந்தவர்களை ஒரு கணக்கெடுத்துப் பார்த்தால் அங்கேதான் அதிகமாக இருக்கிறது. இங்கே அந்த மாதிரி ஹார்ட் டிசீசோ, மற்ற எதுவோ கிடையாது. காரணம் என்னவென்றால், இங்கே இண்டஸ்டிரீஸ் கிடையாது. இல்லாததினால் இங்கே எல்லோரும் க்ஷேமமாக இருக்கிறீர்கள். (கரகோஷம்.) அதற்கு நீங்கள் இப்பொழுது ஒன்றும் அதிகமாகப் பிரயாசைப்பட வேண்டாம். பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டாம் எடுக்காத வரைக்கும் உடம்புக்காவது கொஞ்சம் சுகமாக இருக்கிறது, இருங்கள். ஆனால் விவசாயத்தை விருத்தி செய்யுங்கள் அது உடம்பிற்கும் மனதிற்கும் வியாதியின்றி சுகத்தைக் கொடுக்கும்.

ஆனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்றால், இந்த நிலைமை இப்படியே நீடித்திருக்காது. கவர்ன்மெண்ட் இப்பொழுது எலிமெண்டரி ஸ்கூலில் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். (பலத்த சிரிப்பு.) முதலிலேயே எல்லாம் படித்துத் தெரிந்து கவர்ன்மெண்டுக்கு வரவில்லை? எங்கேயோ மேடையில் லெக்சர் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். அதிக கூட்டம் சேர்ந்தது அந்த பலத்தினாலே கவர்ன்மெண்ட் வந்தது, அவர்கள் அரசாட்சிக்கு வந்திருக்கிறார்கள். வந்து அறிவிலி படித்தார்கள். இப்பொழுது எலிமெண்டரி படிக்கிறார்கள் பிறகு I பாரம், II பாரம், III பாரம், பி. எ. டிகிரி வாங்குவதற்கு இன்னும் 5 வருஷம், 10 வருஷம் ஆகும். அதற்குள்ளாக, இவர்களும் பார்த்து என்னென்னவோ கஷ்டப்படுகிறார்கள். நல்லது செய்ய வேண்டும். ஜனங்களுக்கு நல்லது செய்ய வேணடும். செய்துகொண்டும் வருகிறார்கள். சிறிது, சிறிது

செய்து வருகிறார்கள். ஆனால் கெட்டது அதிகம் செய்கிறார்கள் நல்லது சொஞ்சம்தான் செய்கிறார்கள். அது அப்படியே இருக்காது. இன்னும் கொஞ்சம் நாளில் கொஞ்சம் திருந்தி, எல்லாவற்றையும் சரி பண்ணுவார்கள். அந்த சரிபண்ணுகிற காலம் வருகிற வரைக்கும் நீங்கள் என்ன பண்ண வேண்டும் என்றால், பணத்தையே சும்மா வைத்தாலும் பிரயோசனம் இல்லை. அது கடன் கொடுத்தாலும் திரும்பி வந்து சேருகிறது கஷ்டம் அல்லது வேறு எதிலாவது போட்டாலோ லைசன்ஸ் தகராறு, அது இது, சாமான்கள் வருவதில்லை. ரா மெடீரியல் (raw material) கிடைக்கிறதில்லை என்றால் அது அப்படித்தான் இருக்கும். ஆனால் அது அப்படி இருந்தாலும் இருக்கட்டும் என்று நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால் ஏதாவது ஒரு தொழில் ஆரம்பிக்கிறேன். என்று அதற்கு வேண்டிய மிஷினரிகள், அதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து வைக்கலாம். ஆனால் அதிலிருந்து லாபத்தை ஒன்றும் எதிர்பார்க்கக் கூடாது. போட்டோம், இரண்டு வருஷம், மூன்று வருஷம் அதில் லாபம் ஒன்றும் இல்லை. அதனால் அதைத் துலைத்துவிடலாம் என்று யாரோ வடக்கத்திக்காரன், கிழக்கத்திக்காரனுக்கோ ஒன்றும் கொடுத்து விடக்கூடாது. சும்மா வைத்திருக்க வேண்டியது. அதற்கு சந்தர்ப்பம் வரும்பொழுது அதை ஆரம்பிக்க வேண்டும். அது வரைக்கும் இந்த இளைஞர்களுக்கு என்ன பண்ண வேண்டும் என்றால், அவர்களுக்கு இந்த ஊரிலேயே ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியோ, அல்லது வெளியூர்களுக்கு அனுப்பியோ நல்ல டிரெயினிங் கொடுத்து, ஒரு தொழில் செய்வதற்கு லாயக்காக செய்து வையுங்கள். ஸ்ரீ சங்கரலிங்கம் ஆரம்பித்திருக்கிறாரே பாலிடெக்னிக் அதற்கு மத்திய கவர்ன்மெண்டில் 50% கொடுக்றார்

கள், இந்த கவர்ன்மெண்டில் 25% கொடுக்கிறார்கள், அவரும் 25% தருகிறேன் என்று கொடுத்திருக்கிறார் கள். அவர் 25% கொடுத்திருக்கிறாரே அந்த 25%டே போதும் இன்னும் ரொம்ப நல்ல வழியிலே காலேஜ் ஆரம்பிக்கலாம். அவர் நினைத்தது "கவர்ன் மெண்டில் நாம் வாங்கிவிட்டோம் அது நமக்கு லாபந்தான் அதில் நாம் கொஞ்சந்தானே கொடுக் கிறோம்", என்று கொடுத்து ஆரம்பித்திருக்கிறார்கள். ஏதோ மற்ற இடங்களில் ஆரம்பிக்கிறார்களே, இன் னும் ஆர்ட்ஸ் காலேஜ் முதலியன ஆரம்பிக்கிறார்களே அந்த மாதிரி மோசமான தல்ல, சும்மா இருப்பதற்கு, இது கொஞ்சம் நல்லதுதான். ஆனால் இதைவிட நல்லது அவர் இன்னும் ஆரம்பிக்கலாம். அதைப் பற்றி நாம் சொன்னால், கேட்பாரோ, மாட்டாரோ தெரியாது. அதுவும் பார்க்கலா மென்றிருக்கிறேன். போய் சொன்னால், இது தப்பு என்று சொல்லித் தானே இனியொன்று ஆரம்பிக்க வேண்டும். இது தப்பு என்று சொன்னாலே இனியொன்று சொல் வதை கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எப்படியோ சொல்லிப் பார்க்கலாம். அவர்கள் இந்த ஊரில் நல்ல ஸ்கூல்களெல்லாம் ஆரம்பிக்கலாம். மிகவும் உபயோகமுள்ளதெல்லாம் ஆரம்பிக்கலாம். ஆனால் அவர் ஆரம்பிக்கவில்லை யென்றால் மற்றவர் களாவது ஆரம்பித்து, ஒழுக்கமான முறையில் இளை ஞர்களுக்கு கொடுக்கக் கூடியதும் பின்னால் ஒரு தொழில் தானே செய்யக்கூடிய வகையில் இருக்கக் கூடியதுமான தொழில்களையும் பழக்கி வைக்க வேண்டியது. அதற்கு வேண்டிய வேலைகளை, கமிஷனரும், சேர்மனும், வைஸ் சேர்மனும், கலெக் டரும் எல்லோரும் சேர்ந்து, வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியது. அதற்கு வேண்டிய ஏற் பாடுகள் என்னவென்று கேட்டால் நானே சொல்லு

கிறேன். அது மிகவும் சாவகாசமாக பேச வேண்டிய விஷயம், இப்பவே மிகவும் நேரமாய் விட்டது ரொம்பவும் நேரமாய் விட்டது. இதுவரைக்கும் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்த வரைக்கும் ரொம்பவும் சந்தோஷம். இவை எல்லாவற்றையும் விட எனக்கு இவ்வளவு பெரிய வரவேற்புக் கொடுத்ததற்கு பின்னும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். (பலத்த கரகோஷம்).

உபதலைவர் நன்றி கூறுதல்.

பெரியோர்களே,

சென்ற ஒரு மணி நேரமாக கோயமுத்தூர் ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களுடைய அருமையான பிரசங்கத்தை கேட்டிருந்து ரசித்து அவர்களை எங்கள் தலைவரும், மற்றுமுள்ள கௌன்சிலர்களும், இருமுறை கோயமுத்தூருக்குச் சென்று அவர்கள் மிகவும் வேண்டிக்கொண்டார்கள். பழக்கமாக சென்ற 12 வருடமாக கேட்ட பலருடைய பிரசங்கத்தை விட, இது ஒரு புது மாதிரியான பிரசங்கத்தைக் கேட்டோம். பெரும்பாலும் அவர்கள் ஒரு கிரிடிக் மனப்பான்மையைச் சேர்ந்தவர். அவர்களுடைய நேர்மை, அளவுகடந்தது நான் கூறவில்லை, தமிழ் நாட்டில், விஞ்ஞானியாகிய சர் சி. வி. ராமன் அவர்கள் ஒரு இடத்தில் குறித்திருக்கிறார்கள் a remarkable man என்று கூறியிருக்கிறார். பத்திரிகைகளில் அதிசய மனிதர், அதிசய மனிதர் என்று பத்திரிக்கைகளில் போட்டிருக்கிறார்கள் இது விளங்கவில்லை. அவருடைய மதிப்புரையை கண்ட பிறகுதான் அவர்கள் போட்டிருப்பது சரிதான் என்று உணர்ந்தேன். அவர்களுடைய கருத்துக்களிலிருந்து நாம் பலவகையிலும் மாறுபட்டிருக்கலாம். ஆனால் ஒன்றே ஒன்றுமட்டும் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும் ஜனநாயக நாடென்று. சர்க்காரோ அல்லது சம்மந்தப்பட்ட அதிகாரிகளோ, எத்தகைய தவறுதல்கள் இருந்தாலுங்கூட வெளிப்படையாக யாரும் தைர்யமாக முன்வந்து கூற முடியும் ஜனநாயக நாடு. ஆகையால் அவர்கள் எத்தகைய குற்றங் குறைகள் சொன்னாலும், நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அவ்வாறு நம்மிடையே குற்றங்குறைகள் இருந்தாலும் அதைப் போக்கடிப்

பதற்கு ஒரு அரிய நல்ல சந்தர்ப்பத்தை நமக்கு அளிக்கிறார். ஆகவே நாம் பெரிதும் பாராட்டப் பட்டிருக்கிறோம். அரசியல், பொருளாதாரத் துறை யிலோ தொழில் துறையிலோ மற்றும் சமூகத் துறை யிலோ அவர்கள் பெரும்பான்மையான மக்களுடைய கருத்துக்கு மிகவும் மாறு பட்டிருக்கிறார். மணிக் கணக்காக பேசிக் கொண்டிருப்பார்கள். தங்களு டைய நண்பர்களுடன் பேசும்பொழுது, அவரு டைய கருத்துக்களை மழை பொழிந்த வண்ணமாக பேசிக் கொண்டேயிருப்பார்கள். எத்தனையோ விதத்தில் நாம் மாறுபட்டிருக்கலாம் அவருடைய அபிப்பிராயத்திற்கு. புதிய முறையை அவர் சிந்திக் கக்கூடிய ஆற்றல் வந்து விடுகிறது. இத்தகைய மேதையை இன்று இந்த 13 வது தேசியப் பொருட் காட்சிக்கு வந்து அவர்களுடைய எவ்வளவோ அலு வல்கள் இருக்கின்றன. அவர் இங்கு வந்து, பல, பல நண்பர்கள் வந்து அவர் பேச்சைக் கேட்டுக் கொண் டிருக்கிறார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களை யெல் லாம் விட்டு விட்டு நமது அழைப்பிற் கிணங்கி இங்கு வந்து ஆயிரக்கணக்கான மக்கள் இத்தகைய அதிசய மனிதரை பார்ப்பதற்காக திரண்டு ஆயிர ஆயிரக் கணக்கானவர்கள் இடித்துக் கொண்டு வந்தி ருக்கிறீர்கள். இந்த நிலைமையில் அவர் இங்கு வந்து தன்னுடைய அரிய கருத்துக்களை இங்கு கூறி எங்க ளுடைய அழைப்பிற் கேற்ப வந்ததற்கு, எங்களு டைய பொருட் காட்சியின் கமிட்டியின் சார்பாக, நகர சபையின் சார்பாகவும், நன்றி கலந்த வணக் கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். (கரகோஷம்.) அடுத்தப்படியாக இத்தனை தூரம் வந்து பொருட் காட்சியை சிறப்பாக நடத்திக் கொடுத்த பொது மக்களுக்கும், மற்றும் பெரியோர்களுக்கும் என்னு டைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறோம். வணக்கம்.

Printed at

U. M. S. POWER PRESS,
COIMBATORE.